விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி

## Valampurii



E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 051 வள்ளுவர் ஆண்டு 2054 தை 25 புதன்கிழமை (08.02.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=


## உறவுகள் பயணித்த பேருந்து மீது தாக்குதல்



15

## கிளிநொச்சியில் விபத்து; ஸ்தலத்தில் ஒருவர் பலி

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் பலியாகியுள்ளார்.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பரந்தன் பூநகரி வீதியின் ஓசியர் கடை சந்திப் பகுதியில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சியிலிருந்து பூநகரி நோக்கி பயணித்த கப் ரக வாகனத்துடன் பூநகரி 15

# தடைகளை தகர்த்தெறிந்து வெற்றி கண்டது பேரணி

- பல்கலைக்கழக மாணவர்களால் கொள்கைப் பிரகடனம் வாசிக்கப்பட்டது.
- பேரணியை குழப்ப பல்வேறு சதிகள்.
- பொலிஸாரின் கெடுபிடிகள் தீவிரம்.





(மட்டக்களப்பு)

சுதந்திர தினத்தை கரிநாளாக அறிவித்து கடந்த 4ஆம் திகதி வடக்கிலிருந்து கிழக்கு நோக்கி ஆரம்பமான பேரணி பல்வேறு தடைகளுக்கும் மத்தியில் நேற்று வெற்றிகரமாக மட்டக்களப்பில் நிறைவடைந்தது.

(04ஆம் பக்கம் பார்க்க)

# 13வது திருத்தத்துக்கு அப்பாலும் அதிகாரங்களைப் பகிருங்கள்

## யாழில் சர்வமதத் தலைவர்கள் வலியுறுத்து



(யாழ்ப்பாணம்)

13ஆவது திருத்தத்துக்கு மேலதிகமாக தமிழர்களுக்கு அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என பௌத்த பிக்குகள் உட்பட சர்வமதத் தலைவர்கள் யாழில் நேற்று கூட்டாக அறிவித்தனர்.

(15ஆம் பக்கம் பார்க்க)

மகனைத் தேடியலைந்த

## மற்றுமொரு தாய் கொழும்பில் உயிரிழப்பு



(கொழும்பு)

2006ஆம் ஆண்டு கொழும்பு பொரளையில் வைத்து வெள்ளை வானில் கடத்திச் செல்லப்பட்ட வடிவேலு திவாகரனின் (யாழ்.இந்துக் கல்லூரி பழைய 15

ஒன்றாக மது அருந்திவிட்டு

## இளைஞனை கிணற்றுக்குள் தள்ளிவிழுத்தி கொலை

- விசாரணையில் தகவல்
- மூவர் கைது

(கரணவாய்)

புதுக்குடியிருப்பு சுதந்திரபுரம் வெள்ளப்பள்ளம் பகுதியில் இளைஞன் ஒருவர் கிணற்றில் விழுந்து உயிரிழந்த நிலையில் கடந்த 5ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்டார். 15


## 13க்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் இன்று பௌத்த பீடங்கள் போராட்டம்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் புதிய கூட்டத்தொடர் இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில் 13ஆவது திருத்தத்தினை மகா சங்கத்தினரது எதிர்ப்புக்கு 04

# தமிழ் மக்கள் விட்ட கண்ணீரே நாட்டின் இன்றைய நிலைக்குக் காரணம்

## சர்வமதத் தலைவர்களின்முன் கலாநிதி ஆறு.திருமுருகன்



(யாழ்ப்பாணம்)


தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியும் அவர்கள் விட்ட கண்ணீருமே நாட்டை இந்த நிலைக்குக் கொண்டு வந்துள்ளதென்பதை அறத்தைக் காக்க வேண்டிய மதத் தலைவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என சிவபூமி அறக்கட்டளையின் நிறுவுனர் கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த சர்வமதக் குழுவினர் நேற்று மாலை நல்லை ஆதினத்துக்குச் சென்று கலந்துரையாடினர்.

இதன் போது, 15

துருக்கி நிலநடுக்கம்

## 5 ஆயிரத்தை கடந்தது பலி எண்ணிக்கை!



(கொழும்பு)

தென்கிழக்கு துருக்கி மற்றும் வடக்கு சிரியா முழுவதும் தாக்கிய பேரழிவுகரமான நிலநடுக்கத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஐந்தாயிரத்தை கடந்துள்ளது.

துருக்கியில் ஏற் 15

நடுவு நிலை தவறா[illegible]க்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி சிறிதவம் சண்முகநாதன் (பேக்கரி அக்கா)



மலர்வு 26 . 01 . 1950

உதிர்வு 05 . 02 . 2023

சரவணையைப் பிறப்பிடமாகவும் யோகபுரம் மத்தி மல்லாவியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிறிதவம் சண்முகநாதன் (பேக்கரி அக்கா) கடந்த ஞாயிற்றுக்கிழமை (05.02.2023) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகநாதனின் (பேக்கரி) அன்பு மனைவியும், காலஞ்சென்ற அருணாசலம் - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், கேதீஸ்வரன், மேகனாநாதன், காலஞ்சென்ற ஜெகநாதன் (அப்பு), திருமாவளவன், காந்தரூபி, காலஞ்சென்ற வசுமதி ஆகியோரின் அருமைச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான இலிங்கப்பிள்ளை, விசாலாட்ச்சி, கண்மணிப்பிள்ளை ஆகியோரின் அருமை மைத்துனியும், பிரபாகரன், ஞானகரன், பாஸ்கரி (ரதி), சசிகரன், சுபாஸ்கரி (கவிதா) ஆகியோரின் அன்புத் தாயாரும், மாலினி, தர்சினி, சிறிகுமார், தீபா, குகன்யோகராஜா ஆகியோரின் அருமை மாமியாரும், பிரபாலினி, சங்கீர்த்தன், சிவர்மன், அகரன், அதியன், பாவலன், தர்மிகா, தரணிகா, புகழினியன், அகழினி, சோபனா, லக்ஷிகன், சுவேதா, நித்திலன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வியாழக்கிழமை (09.02.2023) அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அனஞ்சியன் குளம் பொது இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிரபாகரன் (மகன் - இலங்கை) - 077 986 3734
ஞானகரன் (மகன் - நோர்வே) - 0047 792 552 222
பாஸ்கரி (மகள் - இலங்கை) - 077 049 2636
சசிகரன் (மகன் - இலங்கை) - 077 529 3137
சுபாஸ்கரி (மகள் - நோர்வே) - 0047 995 57478


தகவல் - குடும்பத்தினர்

(14542)

# மரண அறிவித்தல்

## சீனித்தம்பி குணலிங்கம்

(நீர்வேலி சி.சி.த.க. பாடசாலை, வவுனியா தம்பனைச் சோலை கேதீஸ்வரா வித்தியாசாலை ஓய்வுநிலை அதிபர், குப்பிழான் சொக்கவளவு சோதிவிநாயகர் ஆலய முன்னாள் தலைவர்)



அன்னை மடியில் 07 . 10 . 1939

ஆண்டவன் அடியில் 06 . 02 . 2023

யாழ்.குப்பிழான் தெற்கு குப்பிழானைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திரு.சீனித்தம்பி குணலிங்கம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (06.02.2023) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சீனித்தம்பி நல்லமுத்து தம்பதிகளின் அன்புப் புதல்வனும், கனகம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புச் சகோதரனும் ஆவார். நந்தகுமார், சாந்தகுமார், உதயகுமார், வசந்தி, சுரேஸ்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், வனஜகுமாரி, வளர்மதி, சந்திரன், ஞானரூபினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும்,

நோஜிகா, கபிலன், செரின், சாரங்கன், கோகிலன், விதுலன், லவன், தேனுகா, லோஜிகா, ஹஸ்மிஜா, பிரணவி, பிரணவன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை (08.02.2023) முற்பகல் 11.00 மணியளவில் குப்பிழான் தெற்கில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக குப்பிழான் காடாகடம்பை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுத் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-5928)

தகவல் -குடும்பத்தினர்



தோற்றம் 15.07.1948

மறைவு 05.02.2023

# கண்ணீர் அஞ்சலி

அமரர்

## சோமசுந்தரம் நாகம்மா

எமது கிராமத்தைச் சேர்ந்தவரும், எமது மக்களையும் கிராமத்தையும் மதித்து துன்பம் வந்த போதெல்லாம் உறுதுணையாக நின்று வெள்ளப் பெருக்கின்போது உணவு வழங்கி, கொரோனா எனும் கொடிய நோயினால் மக்கள் அவதிப்படும் போது சத்துணவு வழங்கி அன்புக்கும் மதிப்பிற்கும் பாத்திரமாக விளங்கும் **சோ.பிரகதீஸ்வரன்** அவர்களின் தாயார் அமரர் **சோமசுந்தரம் நாகம்மா** அவர்களின் மரணச் செய்தி கேட்டு நிலைகுலைந்து நிற்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

கொட்டடி வாழ் மக்களும் அப்பிரதேச மாநகரசபை உறுப்பினர்
லயன் கலாநிதி தேசமான்ய **நா.தனேந்திரனும்** (சமாதான நீதவான்)

(14541)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலுக்கான நிதியை வழங்காவிட்டால் உயர் நீதிமன்றம் செல்ல நேரிடும்

## தேர்தல்கள் ஆணைக்குழு எச்சரிக்கை

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கு தேவையான நிதி ஒதுக்கீடுகளை கோரி நிதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்திற்கு இதுவரையில் உரிய பதில் கிடைக்கவில்லை. உரிய பதில் வழங்கப்படாவிட்டால் உயர் நீதிமன்றின் உதவியை நாட நேரிடும் என தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.



அரச அச்சகத் திணைக்களம், பொலிஸ் திணைக்களம், தபால் திணைக்களம் உள்ளிட்ட தேர்தல்களில் பங்களிப்புச் செய்யும் நிறுவனங்களுக்கு முற்பணம் வழங்குமாறு கோரப்பட்டிருந்ததாக தெரிவித்துள்ளார்.

ஆரம்ப கட்டச் செலவாக 770 மில்லியன் ரூபாய் பணத்தை திறைசேரியின் செயலாளரிடம் கோரி இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கடந்த கால தேர்தல்கள் உடன் ஒப்பீடு செய்யும் போது இம்முறை வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்டு இரண்டு வாரங்கள் கடந்துள்ள நிலையிலும் தேர்தல் வன்முறை சம்பவங்களின் எண்ணிக்கை குறைவாக காணப்படுவதாக தேர்தல் கண்காணிப்பு நிறுவனங்கள் தெரிவிக்கின்றன. (நி)

## 55 அரச அலுவலகங்களை மூட அரசு முடிவு - அதிரடி அறிவிப்பு

(கொழும்பு)

அதிக எண்ணிக்கையிலான பணியாளர்களைக் கொண்ட 55 திட்ட அலுவலகங்களை மூட அரசு முடிவு செய்துள்ளது.

திட்ட அலுவலகங்கள் மற்றும் திட்ட முகாமைத்துவ அலகுகளை மீளாய்வு செய்வதற்கான குழுவின் அறிக்கையின் அடிப்படையில் அமைச்சரவை இந்தத் தீர்மானத்தை எடுத்ததாக அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். (நி)

## நியூசிலாந்தின் புதிய பிரதமருக்கு ஜனாதிபதி ரணில் வாழ்த்து

(கொழும்பு)

நியூசிலாந்தின் புதிய பிரதமராக நியமிக்கப்பட்டுள்ள கிறிஸ் ஹாப்கின்ஸ்க்கு இலங்கை சார்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

மேலும் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்த எதிர்பார்த்துள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (நி)

## சார்ள்ஸின் இராஜினாமா கடிதத்தை ஏற்றார் ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)

தேர்தல்கள் ஆணைக் குழுவின் உறுப்பினர் திருமதி.பி.எஸ்.எம்.சார்ள்ஸின் இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக் கொண்டுள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் எக்கநாயக்க இந்தத் தீர்மானத்தை தமக்கு அறிவித்ததாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி)



## நாடு திரும்பினார் பல்கேரியத் தூதுவர்

(கொழும்பு)

இலங்கைக்கான பல்கேரியத் தூதுவர் எலேனோரா டிமிட்ரோவா இலங்கையில் தனது சேவையை நிறைவு செய்துகொண்டு தனது நாட்டுக்கு செல்வதற்கு முன்னர் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தார்.

எலினோராவுடன் சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்ட ஜனாதிபதி, இலங்கைக்காக அவர் ஆற்றிய சேவையைப் பாராட்டியதுடன் அவரது எதிர்கால முயற்சிகளுக்கு வாழ்த்துகளையும் தெரிவித்தார்.

எதிர்காலத்திலும் இலங்கைக்கு அனைத்து விதமான ஆதரவையும் வழங்குவதாக இலங்கைக்கான பல்கேரியத் தூதுவர் எலேனோரா டிமிட்ரோவா தெரிவித்தார். (நி)

## போராட்டத்தில் குதிக்கவுள்ள வங்கி ஊழியர்கள்

(கொழும்பு)

நாடு முழுவதும் இன்று புதன்கிழமை மதியம் 12.30 மணியுடன் வங்கி ஊழியர்கள் அரை நாள் வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்க தீர்மானித்துள்ளனர். வங்கி ஊழியர்களின் சம்பளத்தின் மீது விதிக்கப்பட்டுள்ள அரசாங்கத்தின் நியாயமற்ற வரிக் கொள்கைக்கு எதிர்ப்பினை வெளியிடும் முகமாக இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் குறித்த அரை நாள் வேலை நிறுத்தம் இடம்பெறவுள்ளது. (நி)

## ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி சட்டத்தில் திருத்தங்கள்

(கொழும்பு)

ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதிச் சட்டத்தில் திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்கான சட்டமூலத்தை தயாரிப்பதற்கு வரைவு தயாரிப்பாளருக்கு அறிவுறுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தனியார் துறை ஊழியர்களுக்கு அக்ரஹார சுகாதார காப்புறுதிக்கு நிகரான சுகாதார காப்புறுதியை வழங்குவதற்கான பிரேரணை 2023 வரவு-செலவுத் திட்ட உரையில் ஜனாதிபதியினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

முன்மொழிவை நடைமுறைப்படுத்த 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் வருங்கால வைப்பு நிதிச் சட்டத்தில் திருத்தம் செய்வது அவசியம்.

எனவே, நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ஊக்குவித்த பிரேரணைக்கு அமைச்சர்கள் சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (நி)

## துருக்கியில் வாழும் இலங்கையர் தொடர்பில் அறிய தொ. இலக்கங்கள்

(அங்காரா)

துருக்கியில் வாழும் இலங்கையர்கள் தொடர்பில் விசாரிப்பதற்கு அல்லது தகவல் வழங்குவதற்கு துருக்கியிலுள்ள இலங்கைத் தூதரகம் அவசர தொலைபேசி இலக்கங்களை அறிவித்துள்ளது. இதன்படி 0090312 4271032 மற்றும் 00905344 569498 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியுமென தெரிவித்துள்ளது. (நி)

## துருக்கிக்கு உதவி வழங்க இலங்கை தயார்

### அமைச்சர் அலி சப்ரி

(கொழும்பு)

துருக்கி அரசாங்கத்தின் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டால் உதவிகளை வழங்க இலங்கை தயாராக இருக்கின்றது என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

அதற்காக இராணுவத் தினர், மருத்துவர்கள் மற்றும் பொறியியலாளர்கள் உட்பட 300 பேர் கொண்ட இராணுவக் குழுவொன்றை களமிறக்க இலங்கை தயாராக இருக்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டி ஐக்கிய அரபு அமீரகத்துக்கு மாற்றம்?

## அடுத்த மாதம் இறுதி முடிவு

ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டியை செப்டெம்பர் அல்லது ஒக்டோபரில் பாகிஸ்தானில் நடத்த திட்டமிடப்பட்டது.

ஆனால், ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடரில் விளையாடுவதற்காக இந்திய அணி பாகிஸ்தானுக்கு செல்லாது என்பதில் பிசிசிஐ உறுதியாக உள்ளது.

இந்திய அணியால் பாகிஸ்தானில் விளையாட முடியாததால் ஆசிய கிண்ணப் போட்டி பொதுவான இடத்துக்கு மாற்றப்படும் என்று ஆசிய கிரிக்கெட் கவுன்சில் தலைவரும், இந்திய கிரிக்கெட் கட்டுப் பாட்டு சபைத் செயலாளருமான ஜெய்ஷா அறிவித்து இருந்தார். இதற்கு பாகிஸ் தான் கிரிக்கெட் சபை தனது கடும் எதிர்ப்பை தெரிவித்து இருந்தது. இந்த நிலையில் ஆசிய கிரிக்கெட் கவுன்சிலின் அவசர கூட்டம் பஹ்ரைனில் நடந்தது. பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் நஜம் சேதியின் வலியுறுத்த லின் பேரில் இந்த அவசர கூட்டத்துக்கு ஏற்பாடு செய் யப்பட்டு இருந்தது. இந்த கூட்டத்தில் இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. அதேநேரத் தில் பாகிஸ் தானில் இருந்து இந்தப் போட்டியை ஐக்கிய அரபு அமீரகத்துக்கு மாற்ற திட்டமிட்டு உள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது. அங்குள்ள டுபாய், சார்ஜா, அபுதாபி ஆகியவற்றில் போட்டி நடைபெற வாய்ப்பு உள்ளது.




ஆசிய கிண்ண போட்டி குறித்த இறுதி முடிவு அடுத்த மாதம் எடுக்கப் படுகிறது. கடந்த ஆசிய கிண்ண போட் டியும் ஐக்கிய அரபு அமீரகத் தில் தான் நடந்தது என்பது குறிப்பிடத் தக்கது. (4)

### 13க்கு...

பிறகும் நடைமுறைப்படுத்த முயல்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று ஆயிரக்கணக்கான தேரர்கள் கொழும்பில் ஒன்றுகூடவுள்ளனர்.

ஜனாதிபதி தன்னிச்சையாக முடிவெடுப்பதைத் தடுக்க வேண்டும். இனவாதத்தை ஏற்படுத்தும் முயற்சியினை தோற்கடிக்க வேண்டும். 13 மக்களின் தேவையல்ல என்ற மகாநாயக்க தேரர்களின் கட்டளையினை உடன் அமுல் படுத்தி 13ஆவது திருத்தத்தை நீக்க வேண்டும் போன்ற கோரிக்கைளை முன்னிறுத்தி இப் போராட்டம் இடம்பெறவுள்ள தாக மூன்று பௌத்த பீடங்கள் கூட்டாகத் தெரிவித்துள்ளன. (4-7)

### தடைகளை...

இலங்கையின் சுதந்திர தினமான கடந்த 4ஆம் திகதி அன்று தமிழர்களுக்கு கரி நாள் என்ற கருப்பொருளின் கீழ் யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பல சிவில் அமைப்புகள் இணைந்து வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிய பேரணியொன்றை ஆரம்பித்திருந்தனர்.

அவ்வாறு ஆரம்பித்தவர்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை திருகோணமலைக்கு வந்து செவ்வாய்க் கிழமை வெருகல் பகுதியிலிருந்து மட்டக்களப்பு நோக்கி பேரணி ஆரம்பமானது.

இப்பேரணியை தொடர்ந்து அரச புலனாய்வாளர்கள் நோட்டமிட்டுக் கொண்ட நிலையில் இப்பேரணி வாழைச் சேனை, கல்குடா, சந்திவெளி, சித்தாண்டி, வந்தாறுமூலை, செங்கலடி ஊடாக மட்டக் களப்பு நகரை வந்தடைந்தது.

அதுபோல்அம்பாறைமாவட்டத்திலிருந்து வந்த இரு தொகுதியினரும், அவர்களுடன் இணைந்து கொண்டனர்.

பின்னர் அனைவரும் மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் சங்கமித்தனர்.

இறுதியில் பல்கலைக் கழக மாணவர்களால் கொள்கைப் பிரகடனம் ஒன்றும் வாசிக்கப்பட்டது.

ஈழத்தமிழர்கள் மரபுவழித் தாயகம், தேசியம், தன்னாட்சியுரிமைக்கு உரித்துடைய ஒரு தேசிய இனம் என்பதன் அடிப் படையிலும் வட்டுக்கோட்டைத் தீர்மானம், திம்புக் கோட்பாடு, பொங்குதமிழ் பிரகடனம் ஆகியவற்றின் நீட்சியாக புதிய பிரகடனமாக இன்று மட்டக்களப்பு பிரகடனமும் அமைந்துள்ளது.

தமிழ் மக்களின் அபிலாசைகள் ஏற்கெனவே கூட்டாகப் பலமுறை வெளிப்படுத் தப்பட்டுள்ள போதிலும், ஈழத் தமிழரின் இனப்பிரச்சினைக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய நிரந்தர அரசியல் தீர்வு இது வரை எட்டப்படவில்லையென்பதால் அந்த அடைவை எட்டுவதற்காக மீண்டும் ஒருதடவை இந்தப் பிரகடனம் மேற்கொள்ளப்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

சர்வதேச கண்காணிப்புடன் கூடிய பொதுவாக்கெடுப்பின் மூலம், தமிழ் மக்களின் ஆணை பெறப்படவேண்டும் என்பதே எமது உறுதியானதும் அறுதியானதுமான நிலைப்பாடாகும்.

அத்துடன் ஈழத் தமிழர்களின் தலைவிதியை ஈழத் தமிழர்களே தீர்மானித்து, எம்மை நாமே ஆளக்கூடிய நிரந்தரத் தீர்வும் பொது வாக்கெடுப்பில் உள்ளடக்கப்பட வேண்டும் என்பதை, தமிழ் மக்கள் சார்பாக இந்தப் பிரகடனம் உலகுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.


பல்லாயிரக்கணக்கான மக்கள் புடைசூழ, பல்கலைக் கழகங்களின் மாணவர்கள், அரசியல்வாதிகள், மதத் தலைவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள், என பல்லாயிரக் கணக்கான மக்கள் இதன் போது கலந்து கொண்டிருந்தனர். (4-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2760

குயிலினி




சஞ்சீவ்




தீபிகா





தனு




துஷா




அயிறின்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எரிவாயு விலை உயர்வு காரணமாக
## உணவுப் பொருட்களின் விலையும் அதிகரிக்கலாம்

(கொழும்பு) உணவகங்களில் விற்பனை செய்யப்படும் உணவுப் பொருட்களின்விலையை உயர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எரிவாயு விலை உயர்வு காரணமாக இவ்வாறு உணவுப் பொருட்களின் விலையை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக உணவக உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் கொத்து, பிறைட் ரைஸ், பரோட்டா, றோல்ஸ், பற்றிஸ் போன்ற உணவு வகைகளின் விலைகளையும் உயர்த்த முயற்சிப்பதாக அவர்கள் தெரிவித்தனர். (நி)

# நாடளாவிய ரீதியில்
## மருத்துவர்கள் பணிப்புறக்கணிப்பு
### அரச மருத்துவர்கள் சங்கம்

(கொழும்பு) நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து மருத்துவர்களும் தமது தனியார் துறை சேவைகளில் இருந்து விலகி இன்று புதன்கிழமை பணிப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக அரச மருத்துவர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நியாயமற்ற வரிக் கொள்கைக்கு எந்தவொரு தீர்வையும் வழங்காத அரசாங்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இந்த நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளதாக அரச மருத்துவர்கள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார். (நி)


## 24ம் ஆண்டு நினைவலைகள்



தாய் மடியில் 31.03.1969

அரன் அடியில் 08.02.1999

அமரர்.

**கிருஷ்ணபிள்ளை ராஜ்குமார்**

(B.AF)

அன்னாரது ஆத்மா சாந்தி பெறுவதாக.

குடும்பத்தினர்

கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.
021 226 1312

(சி-5923)

விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ!

## மரண அறிவித்தல்

தோற்றம் 01 - 12 - 1954



மறைவு 03 - 02 - 2023

**திருமதி. அன்னலட்சுமி சோமசுந்தரம்**

நாவற்காடு,வரணியைப் பிறப்பிடமாகவும்,சண்டிலிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. அன்னலட்சுமி சோமசுந்தரம் அவர்கள் 03.02.2023 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கணபதிப்பிள்ளை சோமசுந்தரம் (பேப்பர் சோமு) அவர்களின் துணைவியாரும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி சிவபாக்கியம் அவர்களின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, இலட்சுமியம்மா தம்பதியினரின் மருமகளும், மனோகரி, ரவிக்குமார் (கண்ணன்-டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாஸ்கரன்,சுபாங்கினி ஆகியோரின் அன்பு மாமியாரும், தேஜஸ்வி,ஸ்வரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற கிருஷ்ணப்பிள்ளை,சிவராசா,ராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், லதாம்பிகை, தங்கம்மா, சண்முகநாதன், தங்கரட்ணம்,பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 08.02.2023 புதன்கிழமை அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப.11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத் தகவலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

T.P - 077 605 9973, 077 998 1761
சண்டிலிப்பாய்

(14537)

தகவல்
குடும்பத்தினர்


# இராசிபலன்

08.02.2023
தை 25, புதன்கிழமை
திருதியை பின்னிரவு 5.38 மணிவரை

பூரம் முன்னிரவு 7.50 மணிவரை
சுபநேரம் 5.05-6.35மணிவரை
இராகுகாலம் 12.35-2.05 மணிவரை

சந்திராஷ்டமம் - அவிட்டம், சதயம்


**வளவன்**




**மேஷம்** தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்,வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், வழிபாடு ஆனந்தம் தரும், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.




**கடகம்** சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.



**துலாம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், திடீர் பண வரவால் மகிழ்ச்சியடைவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்,காரிய அனுகூலமுண்டு.



**மகரம்** உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், திருடர் பயமுண்டு.




**ரிஷபம்** தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள்.




**சிம்மம்** குடும்பத்தில் சுமைகளும் பொறுப்புக்களும் கூடலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.




**விருச்சிகம்** பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், தொலைபேசித் தகவல்கள் மகிழ்ச்சி தரும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.




**கும்பம்** குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, தொழில் வாய்ப்புக்கள் தேடி வரலாம்,இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




**மிதுனம்** எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.



**கன்னி** அலைச்சல்கள் அதிகரித்தாலும் ஆதாயமும் பெறுவீர்கள், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், ஊர்மாற்றம், இடமாற்றம் என்பன இடம்பெறலாம்.



**தனுசு** வீண்பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்,பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு,புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.



**மீனம்** உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

சோம்பலின் விளைவு தரித்திரம், முயற்சியின் விளைவு முன்னேற்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை கரவெட்டி

## நெல்லியடி நவீன சந்தை புதிய கட்டிடத் தொகுதியிலுள்ள கடைகள், மேல்மாடிக் கடைகள் மற்றும் சாண்டா சந்தை கடைகள் வாடகைக் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் – 2023

கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்ட கடைகளினை உள்ளூராட்சித் திணைக்களத்தின் **1980/46** ம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைவாக ஆகக் கூடிய கேள்வித்தொகையினை ஒரே முறையில் இச்சபைக்கு செலுத்துபவர்களுக்கு **2023 பங்குனி** மாதம் தொடக்கம் வாடகைக் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றது.

01. கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- **08.02.2023**
02. கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதித் திகதி :- **21.02.2023 பி.ப 3.00 மணிவரை**
03. கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதி :- **22.02.2023 காலை 10.00 மணிவரை**
04. கேள்விகள் திறக்கப்படும் திகதி :- **22.02.2023** காலை 10.30 மணிக்கு
05. கேள்விப் படிவங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதி அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரும் கடை இலக்கமும் தெளிவாக எழுதப்பட்டு உரிய தினத்திற்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்ட கேள்விப் பெட்டியில் இடுவதன் மூலமாகவோ சேர்க்கப்படல் வேண்டும். அதன் இரண்டாவது பிரதி, பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.
06. கேள்விப் பத்திரங்கள் பெற விரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையை கொண்டு வருவதுடன் கிராம சேவகரினால் உறுதிப்படுத்தப்பட்ட அதன் நிழற்படப் பிரதியையும் கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும்.
07. தலைமை அலுவலகத்தில் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தி படிவக்கட்டணம், மீளளிக்கப்படும் வைப்பு பணம் என்பவற்றைச் செலுத்தி கேள்விப்படிவத்தினை பெற்றுக் கொள்ளலாம்.
08. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமைய கேள்விக் கோரிக்கைகளை சமர்ப்பிக்கப்படாதுவிடின் காரணம் காட்டாது கேள்விமனு நிராகரிக்க பிரதேச சபையின் பெறுகைக்குழுவிற்கு பரிபூரண அதிகாரம் உண்டு.
09. கேள்வி திறக்கப்படும் நாளன்று பிரதேச சபையால் நிர்ணயிக்கப்பட்ட ஆகக் குறைந்த கேள்வித் தொகையை விட குறைந்த கேள்வி இடுதல் சமர்ப்பிக்கப்படின் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படுவதுடன் அவர்களது கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படவும் மாட்டாது.
10. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது சபையின் முன் அங்கீகாரம் பெற்று எழுத்து மூலமாக நியமிக்கப்பட்ட அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
11. விலை மதிப்பீட்டு திணைக்களத்தினால் அதியுச்சமாக 05 வருடங்களுக்கு ஒரு முறை அல்லது சபையால் தேவைப்படுத்தப்படும் காலத்தில் வாடகைப் பணம் மீளாய்வு செய்யப்படும். இம்மாற்றத்திற்கேற்ப மாதாந்த வாடகைக் கட்டணம் மாற்றப்படும். அதனை பிரதேச சபையால் நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் செலுத்துதல் வேண்டும்.
12. சமூக அமைப்புக்களும், கூட்டுத்தாபனங்களும், கூட்டுறவுச்சங்கங்களும் இக்கேள்வி நடைமுறைக்கமைவாக விண்ணப்பிக்கலாம்.
13. சமனான கேள்வித்தொகை சமர்ப்பிக்கப்படும் இடத்து வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசத்தை நிரந்தர வதிவிடமாக கொண்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
14. வாழ்வாதாரத்தை நோக்கமாக கொண்டு அமைக்கப்பட்ட கடைகள் ஆதலினால் ஏற்கனவே வேறு கடைகளிற்கு உரிமையாளராக இருப்பவர்களுக்கு இக்கடை வழங்கப்படமாட்டாது.
15 மாதாந்த வாடகைப் பணத்தை அடுத்து வரும் மாதம் 10 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறின் கட்டுப்பணத்தின் 10% (சதவீதம்) தண்டப்பணமாக செலுத்துதல் வேண்டும். தொடர்ந்து இரு மாதங்களிற்கு வாடகைப் பணங்களைச் செலுத்தத் தவறுவோரது ஒப்பந்தம் தன்னியல்பாகவே இரத்துச்செய்யப்படும்.
16. பிரதேச சபையின் நாளது வரையான கறைநிரற் பட்டியலில் காணப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்பட மாட்டாது. அவ்வாறு தவறுதலாக தங்களால் படிவம் பெறப்பட்டதாக கண்டறியப்படின் அக்கேள்விப்பத்திரம் எதுவித முன் அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.
17. கடையை குத்தகைக்கு பெற்றுக்கொள்பவரே அக்கடைக்கான மின் இணைப்பை இலங்கை மின்சார சபை மூலம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுடன் மாதாந்த மின்பட்டியல் கட்டணத்தையும் குத்தகைதாரரே செலுத்துதல் வேண்டும்.
18. இந் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக, தெரிவு செய்யப்பட்ட குத்தகைக்காரர் சபையுடன் செய்து கொள்ளும் குத்தகை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட வேண்டிய பொறுப்புடையவராகின்றார்.

மேலதிக விபரங்களை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 8.30 மணி முதல் பி.ப 3.00 வரை பெற்றுக் கொள்ளலாம். அல்லது எமது 021 - 226 3271 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

**நெல்லியடி நவீன சந்தை, சாண்டாசந்தை கடைகள் கேள்வி அட்டவணை**

| தொ.இல | கடை இல | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர கட்டணம் | மாத வாடகை |
|---|---|---|---|---|---|
| நெல்லியடி நவீன சந்தை கடைகள் | | | | | |
| 01 | இல 02A | 2,400,000.00 | 24,000.00 | 1,000.00 | 10,000.00 |
| நெல்லியடி மேல்மாடி கடைகள் | | | | | |
| 01 | UF 18 | 960,000.00 | 9,600.00 | 1,000.00 | 4,000.00 |
| 02 | UF 19 | 960,000.00 | 9,600.00 | 1,000.00 | 4,000.00 |
| 03 | UF 20 | 960,000.00 | 9,600.00 | 1,000.00 | 4,000.00 |
| 04 | UF 21 | 960,000.00 | 9,600.00 | 1,000.00 | 4,000.00 |
| 05 | UF 26 | 900,000.00 | 9,000.00 | 1,000.00 | 3,750.00 |
| 06 | UF 27 | 840,000.00 | 8,400.00 | 1,000.00 | 3,500.00 |
| சாண்டா சந்தை கடைகள் | | | | | |
| 01 | இல 01 | 960,000.00 | 9,600.00 | 1,000.00 | 4,000.00 |
| 02 | இல 02 | 960,000.00 | 9,600.00 | 1,000.00 | 4,000.00 |
| 03 | இல 03 | 960,000.00 | 9,600.00 | 1,000.00 | 4,000.00 |

**தலைவர் / பெறுகைக்குழு**
**வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,**
**கரவெட்டி.**
**08.02.2023**
(சி-5924)

# உரும்பிராய் வடக்கு இராசாட்டி அண்ணமார் ஆலய கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் வடக்கு இராசாட்டி அண்ணமார் ஆலயத்தின் மஹாகும்பாபிஷேகத்தினை முன்னிட்டு நாளை வியாழக்கிழமை எண்ணெய்க்காப்பும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கும்பாபிஷேகமும் இடம்பெறவுள்ளன என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (4-6)



யாழ்ப்பாணம் ஆரியகுளம் ஸ்ரீநாக விகாரையில் பொலிஸாரால் இரத்த தானம் கடந்த 4 ஆம் திகதி வழங்கப்பட்டது. குறித்த விகாரையின் விகாரதிபதி சிறீ விமல தேரரின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.
(படம்: சிவசாந்தன்)

# யாழ். மாநகர சபையின் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் வரியிறுப்பாளர்களின் நன்மை கருதி நாளை 9 ஆம் திகதி காலை 9 மணிமுதல் மாலை 3 மணிவரை நடமாடும் சேவை பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வட்டாரம் 19, 23 மற்றும் 26 ஆம் வட்டாரங்களிற்கான ஆதனவரி அறிவித்தல் படிவம்/ சோலை வரி வழங்கல் பெயர் மாற்ற விண்ணப்பப் படிவம் வழங்கல், துவிச்சக்கர வண்டி உரிமம் வழங்கல் போன்ற சேவைகளை வழங்குவதுடன் பொது மக்களால் இதுவரை காலமும் செலுத்தாதுள்ள ஆதனவரி நிலுவைகள் மற்றும் நடப்பாண்டு ஆதனவரி, தண்ணீர் வரி போன்றவற்றை பெற்று யாழ்.மாநகர சபையின் அபிவிருத்தி நடவடிக்கைகளை துரிதப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன் நடப்பாண்டின் ஆதனவரியினை முழுமையாக செலுத்தும் பட்சத்தில் இரண்டாம் மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டுக்கான ஆதனவரியின் 5% கழிவினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

எனவே இதற்கு பொது மக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என யாழ். மாநகர முதல்வர் இ.ஆர்னோல்ட் அறிவித்துள்ளார். (4-6)

# நூதனமான முறையில் பண மோசடி பொதுமக்களே அவதானம்

(யாழ்ப்பாணம்)

நூதனமான முறையில் பண மோசடி செய்யும் நபர்கள் தொடர்பில் பொதுமக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என நெல்லிப்பழை பிரதேச செயலாளர் எஸ்.சிவஸ்ரீ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மிக அண்மைக்காலமாக தகவல் தொடர்பாடல் மற்றும் இலகு பணப்பரிமாற்ற சேவைகளைப் பயன்படுத்தி மிகவும் நூதனமான முறையில் பொதுமக்களிடம் பணத்தினைப் பெற்றுக் கொள்ளும் சம்பவங்கள் தொடர்பில் தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன..

பொதுமக்களினை அவர்களது தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் உட்பட தகவல் தொடர்பாடல் முறையினூடாக தொடர்பினை ஏற்படுத்தும் மோசடிக்காரர்கள் அவர்களுக்கு பணப்பரிசில்கள் கிடைத்தமை பற்றி பல போலியான தகவல்களை தெரிவித்து அவற்றினைப் பெற்றுக் கொள்ள குறிப்பிட்ட தொகையினை தமக்கு அனுப்பி வைக்குமாறு மிகவும் நூதனமான முறையில் நம்பத் தகுந்த வார்த்தைகளைப் பயன்படுத்தி ஏமாற்றி வருகின்றனர்,

எனவே பொதுமக்கள் இவ் வாறான மோசடிகள் தொடர்பில் மிகுந்த அவதானத்துடன் இருக் குமாறு நாம் சகல பொதுமக்களையும் தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம் என தெரிவித்தார். (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத் தடைச்சட்டம் இன்னமும் பிரச்சினைக்குரியதாகவே உள்ளது

## ஐரோப்பிய ஒன்றியம் தெரிவிப்பு

**(கொழும்பு)**

**இலங்கையில் பயங்கர வாதத் தடைச்சட்டம் இன்னமும் பிரச்சினைக்குரியதாகவே உள் ளதாக தெரிவித்துள்ள ஐரோப் பிய ஒன்றியம் அரசாங்கம் இத ற்கு தீர்வை காண்பதற்காக எடுத் துள்ள நடவடிக்கைகள் போது மானவையல்ல எனவும் குறிப் பிட்டுள்ளது.**

நீதிமறு ஆய்வு இல்லாததாலும் அரசியல் நோக்கங்களிற்காக அதனை பயன்படுத்தலாம் என்பதாலும் பயங்கரவாதத் தடை ச்சட்டம் பிரச்சினைக்குரி யதாக காணப்படுகின்றது என இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் டெனிஸ் சைபி தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் தங்களிற்கு எதிராக பயன்படு த்தப்படுவதாக பல அரசியல் வாதிகள் தெரிவித்துள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

பயங்கரவாதத் தடைச்சட்டத் தில் மாற்றங்கள் தேவை என் பது குறித்து இலங்கையின் பரந்துபட்ட மக்கள் மத்தியில் கருத்துடன்பாடு காணப்படுகின்றது.

2017 இல் அரசாங்கம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை சர்வதேச தராதரங்களிற்கு ஏற்ப மாற்றுவதாக உறுதி யளித்தது. கடந்த வருடம் அரசாங்கம் முன்மொழி ந்த மாற்றங்களை நாங்கள் வரவேற்றோம் ஆனால் அது போதுமானதல்ல .

பயங்கரவாதத் தடைச்சட் டத்தை பயன்படுத்துவதில்லை என முன்னைய அரசாங்கம் தீர்மானித்த போதிலும் அது தொடர்ந்தும் பயன்படுத்தப்படு கின்றது.

பயங்கரவாதத் தடைச்சட்ட த்திற்கு பதிலான தேசிய பாதுகாப்பு சட்டம் சர்வதேச தராதரங்களிற்கு ஏற்ப அமைந்திருக்க வேண்டும் எனவும் அவர் எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளார். (நி)

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 06. பிரதானவீதி. ஆதன இலக்கம் 408 எமது ஆதனவரிப்பதிவேட்டில் நிக்கலஸ் தீசவீரசிங்கவும் சொந்தக்காரர்களும் என்ற பெயரில் காணப்படுகிறது.

குறித்த எலிசபத் தங்கரட்ணம் திசவீரசிங்க அவர்களால் பிரசித்த நொத்தாரிசு க.தம்பையா முகதாவில் 11.09.1935 ஆம் திகதியிட்டு 614 ம் இலக்க அறுதி உறுதி மூலம் டொக்டர் ஜோர்ஜ் ரட்ணராஜாவுக்கு கைமாற்றியுள்ளார்கள்.

குறித்த ஜோர்ஜ் மகேந்திரா திசவீரசிங்க, பிரான்சிஸ் அருணதிசவீரசிங்க, கிறிஸ்தோபர் நிரஞ்சன் திசவீரசிங்க பிரசித்த நொத்தாரிசு N.P.K அத்தநாயக்க முகதாவில் 08.02.2005 ஆம் திகதியிட்டு 714 ம் நன்கொடை உறுதி மூலம் நிலப்பரப்பு 20 1/8 மயில்வாகனம் சண்முகரத்தினத்துக்கு கைமாற்றியுள்ளார்கள்.

குறித்த ஆதனத்தை ஜோர்ஜ் மகேந்திரா திசவீரசிங்க, பிரான்சிஸ் அருணதிசவீரசிங்க, கிறிஸ்தோபர் நிரஞ்சன் திசவீரசிங்க, மயில்வாகனம் சண்முகரத்தினம் பிரசித்த நொத்தாரிசு சுகந்தி இராஜகுலேந்திரா முகதாவில் 06.05.2019 ஆம் திகதியிட்டு 2577 ம் இலக்க அறுதி உறுதி மூலம் சிவசுப்பிரமணியம் இராஜேந்திரனுக்கு கைமாற்றியுள்ளார்.

**ஆதன இடாப்பு**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, யாழ்ப்பாணபிரதேச செயலாளர் பிரிவு யாழ்ப்பாண மாநகரசபை, J/75, சுண்டிக்குளி தெற்கு கிராமசேவகர் பிரிவு வரி மதிப்பீட்டு இல 408, பிரதான வீதி, யாழ்ப்பாணம் "காரைதோட்டம்" இது நிலஅளவையாளர் K.நவரட்ணம் அவர்களால் 2014 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 02 ஆம் திகதி 1367ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்ட படத்தின்படி துண்டு 1 இதன் விசாலம் நிலப்பரப்பு பத்து குளி பூச்சியம் பூச்சியம் தசம் ஒன்று இரண்டு (நிலப்பரப்பு 10 குளி 00.12) இது உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே.ஏ.இளையதம்பி அவர்களால் 12.10.2018 திகதியிடப்பட்டு 1357 ம் இலக்கத்தில் வித்தாரிக்கப்பட்ட நிலஅளவைப்படத்தில் துண்டு 1 என சுட்டப்பட்டுள்ளது.

இதற்கு எல்லைகள்

கிழக்கு - வடிகால்
வடக்கு - பிரதான வீதி
மேற்கு - சுரேஷின் ஆதனமும் அணுகு வழியும்
தெற்கு - சாந்தரூபன் ஜெரால்டீன் ஜீன் சுகந்திரா, சைமகன் மோகன், இராஜேஸ்வரி இராசநாயகம் ஆகியோரின் ஆதனம் இதற்குட்பட்ட நிலம் மற்றும் இதடங்கலும் இதைச்சேர்ந்தவைகளும்

தற்போது சிவசுப்பிரமணியம் இராஜேந்திரன் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு/முழுவதிற்கும் உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சிவசுப்பிரமணியம் இராஜேந்திரன் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**முதல்வர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

(C-5921)


PEOPLE'S BANK

## தங்கநகை ஏலவிற்பனை அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 30.09.2021 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் 25.02.2023 (சனிக்கிழமை), 26.02.2023 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய திகதிகளில் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

யாழ்.ஸ்ரான்லி வீதி, மானிப்பாய், கொக்குவில் (நாவலர் வீதி), தெல்லிப்பழை, மல்லாகம், காங்கேசன்துறை, யாழ்.பிரதான வீதி, உரும்பிராய், ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, புத்தூர், சங்கானை, பண்டத்தரிப்பு, சுன்னாகம், கோப்பாய், அளவெட்டி, சாவகச்சேரி, கைதடி, வல்வெட்டித்துறை, யாழ்.பல்கலைக்கழகம், திருநெல்வேலி, கல்வியங்காடு, யாழ்.கன்னாதிட்டி, இணுவில், பருத்தித்துறை, புலோலி, கொடிகாமம்.

**நகை மீளெடுப்பதற்கான இறுதித்திகதி : 24.02.2023**
**ஏலவிற்பனை நடைபெறும் இடம் : யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளை**
**திகதி : 25.02.2023 (சனிக்கிழமை)**
**26.02.2023 (ஞாயிற்றுக்கிழமை)**

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப்போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

**பிராந்திய முகாமையாளர்,**
**மக்கள் வங்கி,**
**பிராந்திய தலைமையகம்.**
**இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.**

**தொ.பே.இல : 021-222 2601 / 021-222 8602**
**தொலைநகல் : 021-222 2602**
**மின்னஞ்சல் : jafrho@peoplesbank.lk**

(C-5911)



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1985 NRC<br>உயரம்:5' 5"<br>தகைமை/தொழில்:A/L காப்புறுதி ஆலோசகர் (அரச)<br>எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/13304 | பிறப்பு: 1998 NRC<br>நட்சத்திரம்: உத்தராடம் 2<br>கி.பா: சூரி 8 செவ் 7 இல்<br>தகைமை/தொழில்: பட்டதாரி<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்<br>தொ.இ:G/13301 |
| பிறப்பு:1991 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 4<br>கி.பா: சூரி 9 செவ் 10 இல்<br>உயரம் :6'<br>தகைமை/தொழில்:மெக்கானிக் டுபாய்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/13305 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 2<br>கி.பா:38 சூரி 3 செவ் 4 இல்<br>உயரம்: 5' 3"<br>தகைமை/தொழில்:BA, MBA(UK)<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்<br>தொ.இ:G/13302 |
| பிறப்பு:1998 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 4<br>கி.பா: சூரி. செவ் 8 இல்<br>உயரம்: 5' 6" .<br>தகைமை/தொழில்:மெக்கானிக் டுபாய்<br>எதிர்பார்ப்பு:படித்த பெண்<br>தொ.இ: B/13306 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 2<br>கி.பா: சூரி 12 செவ் 2 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: BSc, Demo<br>எதிர்பார்ப்பு: தகுந்த வரன்<br>தொ.இ:G/13303 |
| பிறப்பு:1983 கிறிஸ்தவம் RC<br>உயரம்: 181 cm<br>தகைமை/தொழில்:BSc (தனியார் தொழில்)<br>எதிர்பார்ப்பு: படித்த வேலை செய்யும் பெண்<br>தொ.இ: B/13308 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 4<br>கி.பா: 27 ¼ சூரி 12 செவ் 3 இல்<br>உயரம்: 5' 4"<br>தகைமை/தொழில்: L.L.B (Hons) Lawyer<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ: G/13307 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துருக்கி– சிரியா நிலநடுக்கம்

# உயரும் பலி எண்ணிக்கை
# உலக நாடுகள் உதவிக்கரம்

(அங்காரா)

துருக்கியில் நேற்று முன்தினம் ஏற்பட்ட பாரிய துருக்கி மற்றும் சிரியாவில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 5 ஆயிரத்தைக் கடந்துள்ளது. இப்பூகம்பத்தினால் 20,000 பேர் உயிரிழந்திருக்கலாம் என உலக சுகாதார ஸ்தாபன அதிகாரிகள் மதிப்பிட்டுள்ளனர்.









பூகம்பத்தினால் பாரிய அழிவைச் சந்தித்துள்ள துருக்கி சிரியாவிற்கு உலக நாடுகள் தங்கள் மீட்புக் குழுக்களை அனுப்ப ஆரம்பித்துள்ளன. விசேடநிபுணத்துவம் பெற்ற தீயணைப்பு வீரர்கள், மருத்துவ உபகரணங்கள், விசேட பயிற்சி பெற்ற நாய்கள் போன்றவற்றை பல நாடுகள் துருக்கிக்கு அனுப்ப ஆரம்பித்துள்ளன. (நி)

## இடிபாடுகளுக்குள் சிக்கிய கைக்குழந்தை உயிருடன் மீட்பு



(அங்காரா)

சிரியாவில் பூகம்ப இடிபாடுகளிற்குள் சிக்குண்டிருந்த கைக்குழந்தையொன்று மீட்கப்பட்டுள்ளது.

துருக்கி சிரியாவில் பூகம்பத்தினால் பெரும் துயரம் ஏற்பட்டுள்ள அதேவேளை அங்கிருந்து வெளியாகும் தகவல்களில் இடிபாடுகளிற்கு இடையிலிருந்து கைக்குழந்தையொன்று மீட்கப்பட்ட தகவலும் கிடைத்துள்ளது.

சிரியாவின் அஜாஸ் நகரில் பூகம்பத்தின் பின்னர் இடிபாடுகளிற்குள்ளிருந்து கைக்குழந்தையொன்றை மீட்புப் பணியாளர்கள் மீட்டுக் கொண்டு செல்வதை காண்பிக்கும் படங்களும் வீடியோக்களும் வெளியாகியுள்ளன.(நி)

## நிலநடுக்கத்தை சாதகமாக்கி தப்பியோடிய பயங்கரவாதிகள்

(அங்காரா)

துருக்கி மற்றும் சிரியாவில் அடுத்தடுத்து மூன்று முறை ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தால் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளதுடன், பலர் கடும் காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

பல கட்டடங்கள், வீடுகள் தரைமட்டமாகியுள்ளதுடன், மீண்டும் நிலநடுக்கம் ஏற்படலாம் எனும் அச்சத்தில் மக்கள் உள்ளனர்.

குறித்த சூழ்நிலையை சிரியா சிறையில் இருந்த ஐ.எஸ் பயங்கரவாதிகள் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தியுள்ளனர்.

துருக்கிய எல்லையில் உள்ள ரஜோ நகர சிறையில் 1300 ஐ.எஸ் பயங்கரவாதிகள் உட்பட 2000 பேர் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர்.

குறித்த துயரத்தின் மத்தியிலும் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அவர்களில் 20 ஐ.எஸ் பயங்கரவாதிகள் தப்பியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சிரியா மற்றும் துருக்கியில் மீட்புப்பணிகள் நடைபெற்று வரும் நிலையில், தப்பி ஓடிய குறித்த ஐ.எஸ் பயங்கரவாதிகளும் தேடப்பட்டு வருகின்றனர். (நி)

## நிலநடுக்கம் ஏற்படப்போவதை உணர்த்திய பறவைக் கூட்டம்

(அங்காரா)

துருக்கி- சிரியா பகுதிகளில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சிக்கி பல்லாயிரக் கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.



பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழந்த இந்த நிலநடுக்கம் ஏற்படும் முன்னர் பறவைகள் அந்நகரைச் சுற்றி வட்டமடித்துள்ள காட்சிகள் தற்போது இணையத்தளங்களில் வைரலாகி வருகின்றன.

நிலநடுக்கத்தை உணர்த்தவே பறவைகள் அவ்வாறு பறந்து திரிந்ததாக சமூக வலைத்தளத்தில் பலரும் கருத்து பதிவிட்டுள்ளனர். (நி)

## பனிச்சரிவுகளில் சிக்கி ஒஸ்திரியாவில் 10 பேர் பலி

(ஒஸ்திரியா)

ஒஸ்திரியாவின் மேற்குப் பகுதியில் ஏற்பட்ட பனிச்சரிவுகளில் சிக்கி 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

அதிக காற்று மற்றும் பனிப்பொழிவு காரணமாக பனிச்சரிவு அபாயங்கள் அதிகமாக காணப்பட்டுள்ளன.

பாடசாலை விடுமுறையைக் கொண்டாடும் விதமாக அதிகமானோர் பனிச்சறுக்கல் விளையாட்டுக்களில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது, திடீரென அங்கு பனிச்சரிவு ஏற்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

குறித்த பகுதியில் பனிச்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்த போதிலும், பனிச்சரிவில் சிக்கி 10 பேர் உயிரிழந்துள்ளதாக அந்த நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## சர்வதேச சிறுதானிய வருடம் - 2023 இனை முன்னிட்டு சித்தமருத்துவமும் சிறுதானியங்களும் தொடர் வாரக் கட்டுரைகள்

Batanical Name- Eleusine coro cana



### குரக்கன்/இராகி/ கேழ்வரகு

சிறுதானியங்கள் ஏழுனுள் அடங்கும். எல்லா இடங்களிலும் பயிரிடக்கூடியது. இனிப்பு சுவையையும் தட்ப வீரியத்தையும் உடையது. உடலுக்கு பலத்தையும் கொடுத்து உடலைத் தளர்வின்றி பேணக்கூடியது.

கேழ்வரகில் கூழ் அல்லது களி செய்து சாப்பிட்டு வர வாத நோய்களை தணித்து பித்தக் கிளர்ச்சியையும் தணிக்கக்கூடியது.

கேழ்வரகின் கூழற் கிளர் வாத பித்தமொடு
வீழ்வயிறுஞ் சாந்தமென விள்ளுவர்காண்-காழங்
களிக்கு பலமுண்டாங் காணி லதி வாதந்
தளிர்க்கு மூலகிவிதைச் சாற்று.

இஃது எளிதில் செரிக்காது. ஆனால் உடலுக்கு மிகுந்த வலுவைக் கொடுக்கக்கூடியது. உழைப்பாளிகளுக்கு மிகவும் ஏற்றது. அரிசி வகையைவிட புரதச் சத்து அதிகம் உண்டு.

குரக்கன் மாவுடன் சிறிது சர்க்கரை, பால் சேர்த்து கூழ் காய்ச்சி அல்லது களி கிளறிக் குழந்தைகட்கும் நோயுற்றார்க்கும் கொடுக்க உடல் நலமும் வலிவும் உண்டாகும். சிறுதானிய உணவுகளை கொஞ்சமாக எடுத்தாலும் வயிறு உப்பிவிடும். நீண்ட நேரம் பசி எடுக்காது. கூடிய கலோரியை உள்ளெடுத்தல் தவிர்க்கப்படும். சிறுதானிய உணவுகளில் நார்ச்சத்து அதிகம் இருப்பதால் இன்சுலின் எதிர்ப்புத் தன்மையை கட்டுப்படுத்தும்.

அத்துடன் கேழ்வரகில் 20-30 மடங்கு அரிசியை விட மற்றைய தானியங்களை விட அதிகமாக இருக்கும். இதனால் வளரும் குழந்தைகள், 40 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் மற்றும் என்பு பிரச்சினை உள்ளவர்கட்கு சிறந்த சிறு தானியமாகும். அத்துடன் நுண் போசனைக் கூறுகள் அதிகமாகக் காணப்படும். மற்றும் பொஸ்பரஸ், நாகச் சத்து, மக்னீசியம் போன்ற சத்துக்கள் அதிகமாக இருக்கும்.

நோய் எதிர்ப்பாற்றலை அதிகரிக்கக் கூடியது. நார்ச்சத்து அதிகமாக இருப்பதால் உடலில் நல்ல பக்றீரியாக்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கும். செரிமான மண்டலம் சீராகும். மலச்சிக்கல் ஏற்படாது. எதிர் ஒட்சியேற்ற தன்மை இருப்பதால் புற்று நோய்கள் வராமல் தடுக்கக் கூடியது. கல்சியம் சத்து அதிகமாக இருப்பதால் என்பு வளர்ச்சியை அதிகரிக்கும். அத்துடன் சதைகளையும் வலுவாக்கும்.

### குரக்கன் பிட்டு

குரக்கன் மா- ஒரு சுண்டு, கடலைமா-2 மேசைக்கரண்டி, தேங்காய் துருவல் 1/3 சுண்டு, கீரை வகை ஒரு பிடி, கரட்/ போஞ்சி/பயித்தை 50 கிராம், பச்சை மிளகாய், வெங்காயம், அளவான உப்பு, சர்க்கரை-100 கிராம். அகலமான பாத்திரத்தில் குரக்கன் மாவை எடுக்கவும், கழுவித் துப்பரவாக்கிச் சீவிப் பொடி செய்த காய்கறி, கீரை வகை, தேங்காய்த் துருவல், பச்சை மிளகாய், வெங்காயம் முதலிய வெட்டியதை இம்மாக் கலவையுடன் சேர்த்து, தேவையாயின் சர்க்கரையையும் சேர்த்து, இக்கலவையை நீத்துப் பெட்டியில் போட்டு ஆவிச் சட்டியில் எடுத்து நீராவியில் வேக வைத்து எடுத்து சாப்பிடலாம். காய்கறி, இலைவகை, பருப்புமாச் சேர்வதால் நிறை உணவாக அமைந்துவிடும். இப்படியான சிறுதானிய வகை உணவுகள் உடலுக்கு பலத்தை கொடுத்து அதிகரித்த கொலஸ்ரோலின் அளவையும் கட்டுப்படுத்தும் சர்க்கரை நீக்கி நீரிழிவு நோயாளிகள் சாப்பிட்டு வர இரத்தத்தில் சீனியின் அளயையும் கட்டுப்படுத்தும்.

இப்படியான சிறுதானிய உணவுகளை அத்தியாவசியமாக வாரத்தில் மூன்று நாட்களாவது ஒருநேர உணவாக சேர்த்துக் கொள்ளல் அவசியமாகும்.

குரக்கனில் இருந்து வடை, பாயாசம், ரொட்டி, பகோடா, பிட்டு, கூழ் முதலிய ஆரோக்கியமான பாரம்பரிய உணவுகளை தயாரித்து பயன்படுத்தலாம். குரக்கன் கூழ், களியும் முக்கியமான ஆரோக்கிய உணவாகும்.

சவ்வரிசி, கேழ்வரகு சம அளவு எடுத்து தனித்தனி வறுத்து எடுக்கும் வாசனை வந்தவுடன் வறுப்பதை நிறுத்தவும். அதிகம் வறுத்தால் சத்துக்கள் அழிந்து விடும்.

குரக்கனில் இருக்கும் Triptophan எனும் அமினோ அமிலம் பசியை கட்டுப்படுத்தும். பாலூட்டும் தாய்மார், கர்ப்பிணிப் பெண்களுக்கு சிறந்த உணவாகும். பெண்களுக்கு மாதவிடாய் காலத்தில் அதிகமாக இரத்தப் போக்கு ஏற்படுவதை தடுக்கும்.

எனவே சவ்வரிசி, கேழ்வரகு பொடியானது எலும்பையும் இரும்பு போலாக்கும் calcium powder ஆகும். எனவே குரக்கன் போன்ற சிறுதானிய உணவுகளை எமது நாளாந்த உணவில் சேர்த்துக் கொள்வதால் போதியளவு நேரம் செலவிட்டு (15 நிமிடமாவது) உணவை நன்றாகச் சப்பி உண்போமாகில் மனம் திருப்திப்படல் சம்பவிக்கும். சிறுதானியங்களில் நார்ச்சத்து அதிகம் இருப்பதால் பெருங்குடலில் உள்ள பித்தக்குவியல்கள் சிறிய அளவிலேயே carcinagens கொண்டுள்ள தால் புற்று நோய் ஏற்படுத்தும் பொருட்கள் மிகச் செறிவில்லாமல் காணப்படும். குரக்கன மிகச் சிறந்த சிறுதானிய உணவாகும்.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

# காலமாற்றத்தை அனுசரித்த விளைவித்தலின் அவசியம்!

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

எமது வாழ்க்கையில் எவ்வளவு மாற்றங்கள்? நாம் ஒன்று நினைக்க இன்னொன்று நடக்கும் என்பார்கள். எல்லாம் முடிந்த கதை என்றார் அருள்திருயோகர் சுவாமிகள். ஊலகளாவிய ரீதியில் காலநிலையில் ஏற்படும் இந்த மாற்றம் இன்னும் வலுப்பெற்று விவசாயச் செய்கை மட்டுமல்ல விவசாய பண்ணைகள் மற்றும் தொழில் நிறுவனங்கள் எனபலவற்றை பாதிக்கப்போகின்றது.

காலச்சக்கரம் விரைவாக சுழன்று கொண்டிருக்கின்றது. காலநிலை மாற்றமும் முந்தைய நாட்களைப் போலல்லாது மாற்றங்களை வெளிக்காட்டிக் கொண்டிருக்கின்றது. தற்போது நாம் அதனை அனுபவ ரீதியாக உணரத்தலைப்பட்டிருக்கின்றோம். விதைக்கும் காலத்தில் மழையில்லாமல் முளைத்தவை கருகி' விட இப்போது அறுவடைக்குத் தயாராகும் போது மழைவந்து அனைத்தையும் நனைத்துப் போயிருக்கின்றது. விவசாயத்தில் தன்குடும்பம் வாழலாம் என ஏங்கியிருக்கும் அத்தனை உற்பத்தியாளனுக்கும் மனவுளைச்சல் தருகின்ற விடயமாக இவையனைத்தும் மாறியிருக்கின்றன. கிடைக்கின்ற உள்ளீடுகளை வைத்து ஓரளவுக்காவது நெல்லு வரும் என்னும் எதிர்பார்ப்பும் கனவாகவே போய்விடுமோ என்ற ஏக்கத்துடன் அடுத்த பயிர்ச் செய்கைக்கு தயாராகுவதைத் தவிர வேறெதுவும் உற்பத்தி செய்பவனுக்கு கிடையாதே.

விவசாயப் பெருமக்களை காப்பாற்றுவதற்கான திட்டங்களில் நாம் இன்னமும் கரிசனை செலுத்த வேண்டுமென்பதனை இது கட்டியங் கூறி நிற்கின்றது. 2019 ஆம் ஆண்டுகளில் நெல்லுற்பத்தியில் தன்னிறைவு காண வந்து விட்டோம் என புளகாங்கிதமடைந்த அத்தனையும்இப்போது நெல்லை இறக்குமதி செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குதள்ளியிருக்கின்றோம். மாறிவரும் காலநிலையை சரியாக துல்லியமாக கணித்து அதற்கேற்ப விவசாய செய்கைகளை செய்வதற்கு அனுசரணையாக இருந்தால் போதுமே. எமது தேசத்திலும் உற்பத்தியினை விரைந்து பெருக்கிவிடலாம். எம்மை வருகின்ற இடர்களுக்கு தயாராக்கி வைத்திருக்க வேண்டியது இது சார்ந்த அனைவருக்கும் முக்கியமானதாகும். உணவுப் பஞ்சம் வருகிறது வந்துவிட்டது என்ற வாய்ஜாலங்களை விடுத்து எமது பிரதேசத்தில் புத்திசாதுரியமான பயிர்ச்செய்கையை எவ்வாறு செய்வதென்பதனை திட்டமிட்டாலே'இவ்வாறான பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு விடலாம். தள்ளாடும் காலநிலைமைக்கேற்ப பயிர்ச்செய்கை நேரத்தையும் பயிர்வகைகளை தெரிவு செய்வதிலும் கரிசனை காட்டல் அவசியம். எமக்கே உரித்தான எமது தேசத்திற்கென இனங்காணப்பட்ட பயிர் வகைகளை இன்னமும்கைவிடாது அவற்றை நாம் பயிர்செய்வது இவ்வாறான இடர்கள் வரும்போது எம்மைக் காத்துக்கொள்ளலாம்.

ஊலகளாவிய பயிர்ச்செய்கை மாற்றங்களை நாம் அவதானமாக உன்னிப்பாக கவனித்துப் பார்த்தால் அந்தந்த பிரதேசத்துக்கான பயிர்ச்செய்கையை தவறவிடாது அதனை மெருகூட்டி தக்க வைத்துக் கொள்வதனை காணலாம். எத்துணை விஞ்ஞான வளர்ச்சி வந்தாலும் இடர்காலம் என வரும்போது அனைத்துமே அடிபட்டுப் போவதனையும் அவதானிக்கலாம். விஞ்ஞான வளர்ச்சி நாம் வேண்டிய போது உணவு தராது. எமது பாரம்பரிய விவசாய செய்கைகளை நாம் என்று தக்க வைப்பதற்கான முன்னேற்பாடுகளை செய்கின்றோமோ அப்போது தான் எமது இருப்பையும் எமது வாழ்வியலையும் நாம் காப்பாற்றிக் கொள்ளமுனைப்புக் காட்டுகின்றோம் என அர்த்தமாகும்.

பிந்தியது எதுவும் முந்திக் கிடைக்காது. காலநேரத்தை சரியாக கணித்து அதனை அடிப்படையாக வைத்து நாம் பயிர்ச்செய்கையும் அதில் பயிரிடப்போகும் பயிர்களையும் தீர்மானிக்க வேண்டும். காலநிலைமாற்றம் என்பது எமக்கான எம்மையறியாமல் நடக்கின்ற இயற்கை நிகழ்வு. அதனையும் நாம் ஏற்று தாண்டிசெல்ல வேண்டும். விளைநிலத்தின் காலநேரத்தை எம்மால் மாற்ற முடியாது. ஆனால்கட்டுப்பாடான பயிர்செய்கை முறையை அனுசரிக்கத் தொடங்கினால் காலநேர அளவீடுகளை மாற்றிக்கொள்ள வசதிகளுண்டு.

நெற்செய்கை தொடங்கிஏனைய பயிர்களை பொறுத்தமட்டில் அவற்றுக்கான சரியான காலநேரத்தை தீர்மானித்து பின் நடைமுறைப் படுத்தல் அவசியமானதாகும். காலந்தவறி பயிர்ச்செய்கையில் ஈடுபடும் போது அறுவடைக் காலத்தில் அதிகளவிலான வளிமண்டல ஈரப்பதன் காணப்பட்டால் அது நாம் அறுவடைக்குப் பின் செய்யும் சேமிப்பில் பாதிப்பினை ஏற்படுத்தும். தற்போது நிலவும் மந்த நிலையான காலநிலை அறுவடை செய்த பயிர்களை காயவைப்பதற்கோ அதி

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...



லிருந்து பாரம்பரிய வகைகளை விதைக்காகவோ பதப்படுத்திவைக்க முடியாதளவிற்கு நனைந்து விட்டன. இருப்பினும் குறிப்பிட்டுக் கூறக்கூடிய விவசாயப் பெருமக்கள் அந்த நனைந்த நெல்லை காய வைத்து அவற்றை அடுத்த போகத்துக்கான விதை நெல்லாக சேமித்து வைக்கின்றனர். சேமிக்கும் பழக்கம் உணவில் மட்டுமல்ல பணத்திலும் எம்மவர்களுக்கு உள்ளதால் தான் எங்களின் இருப்பை இப்போது வரைக்கும் நாம் தக்க வைத்துக் கொள்கின்றோம் என்பதனை நினைவில் கொள்ளலாம். கால மாற்றம் எம்மையும் விவசாயத்தையும் இன்னும் இடருக்குள் தள்ளப் போகின்றது என்பதனை நாம்உணர்ந்து கொண்டால் அதற்குரிய முன்னேற்பாடான நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை கொடுத்து எமது விவசாயத்தை காப்பாற்றிக் கொள்ளலாம். தனித்த பயிராக விளைவிப்பதனை விட பல்பயிர் கொண்ட பயிர்களாக விளை நிலத்திலேயே பல்வகைத் தன்மையை உட்புகுத்தி அதிலிருந்து பீடை மற்றும் நோய்த்தாக்கத்திலிருந்து காப்பாற்றி விவசாயத்தின் உன்னத நிலையை அடையலாம்.

காலபோகங்களில் மாற்றங்கள் ஏற்பட்டாலும் துவண்டு போகாது கண்டசி வரை காத்திராது இலவு பார்த்த கிளிபோலல்லாது காலநேரத்தின் தன்மைக்கேற்ப பயிர்செய்கை முறைகளில் புத்தாக்கத்தை கொணர்ந்து அதன் மூலம் பயிர்ச் செய்கையில் வரும் எந்தச் சவாலையும் முறியடிப்போம். துவண்டுவிடாதீர்கள் எந்த இடருக்கும் அதிலிருந்து விடுபட வழியுண்டு என்னும் வேதவாக்கு நிச்சயம் எமது விவசாயத்தின் தேவைகளை பூர்த்தி செய்யும். இயற்கை வழி விவசாயத்தின் முக்கியத்துவம் மீண்டும் எமது விடயப்பரப்புக்குள் புரிந்துணரப்படல் வேண்டும்.



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்ணிமுறிப்புக் குளம் புனரமைக்கப்பட வேண்டும்

(அக்கராயன்)



முல்லைத்தீவு தண்ணிமுறிப்புக் குளத்தினை புனரமைப்பதற்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இக்குளத்தின் கீழான விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1954 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இக்குளம் 21 அடி முழுமையான நீர் மட்டத்தினை கொண்டது. 2700 ஏக்கருக்கு நீர்ப்பாசனம் செய்யக் கூடியது. கடந்த ஆண்டு காற்றுடன் கூடிய மழை காரணமாக குளத்தின் உட்பகுதி பெரும் சேதம் அடைந்து இருக்கின்றது.

இந்நிலையில் குளத்தின் அணைக்கட்டினை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். குளத்தின் அணைக்கட்டின் உட்பகுதியில் சேதங்கள் காணப்படுவதன் காரணமாக கூடுதலான நீரினை சேமித்து வைக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது. நீண்டகாலமாக இக்குளத்தின் புனரமைப்பு வேலைகள் இடம்பெறவில்லை. குளத்தின் அணைக்கட்டு சேதமடைந்து உள்ளது.

சில வேளையில் இக்குளம் உடைக்குமானால் குமுழமுனை கிழக்கு மக்கள் பாதிக்கக் கூடிய நிலைமை காணப்படுகின்றது.

இக்குளத்தினை புனரமைப்பதன் மூலமே தண்ணிமுறிப்புக் குளத்தின் கீழ் காலபோகம், சிறுபோகம் வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும். இந்நிலையில் குளத்தின் புனரமைப்புப் பணிகளை முன்னெடுப்பதற்கு மாவட்டச் செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (4-6-350)

# வெள்ளம் வழிந்தோட வழிவகை செய்யுங்கள்

## திருமுறிகண்டி மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு திருமுறிகண்டி கிராமத்தில் மழைக் காலத்தில் தேங்கும் வெள்ளத்தினை கிளிநொச்சி கனகாம்பிகைக் குளத்திற்கு வழிந்தோடுவதற்கான வழிகளை உருவாக்குமாறு அதிகாரிகளிடம் திருமுறிகண்டி கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். 600 வரையான குடும்பங்கள் வாழ்கின்ற இக்கிராமத்தில் மழைக் காலத்தில் பெருமளவு வெள்ளம் மக்கள் குடியிருப்புகளில் தேங்கி நிற்பதன் காரணமாக மக்கள் பாதிக்கப்படுவதுடன் தொற்றுநோய்களும் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன. வெள்ளம் வடிந்தோடாமைக்கான முக்கிய காரணமாக வெள்ளம் வழிந்தோடுகின்ற நீர் வாய்க்கால்களை மண் கொண்டு மூடி இருப்பதன் காரணமாக வெள்ளம் வழிந்தோட முடியாத நிலைமை காணப்படுகின்றது.

எனவே திருமுறிகண்டியின் வெள்ளம் கனகாம்பிகைக் குளத்திற்கு சென்றடைவதற்கான வழிகளை அதிகாரிகள் உருவாக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். (4-6-350)

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

(தருமபுரம்)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வட்டக்கச்சி ஆறுமுகன் வீதி பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்றில் 7 கிலோ 800 கிராம் கஞ்சா பொதியுடன் பயணித்த ஒருவர் சிறப்பு அதிரடிப் படையினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலை அடுத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து கஞ்சாப் பொதியினை சிறப்பு அதிரடி படையினர் பறிமுதல் செய்துள்ளதுடன் சந்தேகநபர் கஞ்சா கடத்துவதற்கு பயன்படுத்திய மோட்டார்சைக்கிளும் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



சந்தேகநபரை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (4-6-316)

## குளங்கள் வான் பாயும் போது

# நன்னீர் மீன்கள் வெளியேறாது தடுக்கப்பட வேண்டும்

## நன்னீர் மீன்பிடி சங்கங்கள் கோரிக்கை

(அக்கராயன்)

குளங்கள் வான் பாய்கின்ற போது நன்னீர் மீன்கள் குளத்தில் இருந்து வெளியேறாமல் தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என நன்னீர் மீன் பிடிச் சங்கங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

நன்னீர் மீன் குஞ்சுகள் குளத்தில் விடப்பட்டு வளர்ந்து வரும் நிலையில் குளங்கள் திடீரென வான் பாய்வதன் காரணமாக வான் வெள்ளத்துடன் மீன்கள் பெருமளவில் வெளியேறி கடலிலினை சென்றடையும் நிலை காணப்படுகின்றது.

இந் நிலையில் வான் பகுதியில் மீன்கள் வெளியேறாத வகையில் வலையமைப்புகள் நிரந்தரமாக உருவாக்கப்படுவதன் மூலம் மீன்கள் குளங்களில் இருந்து வெளியேறாமல் தடுப்பதன் மூலம் நன்னீர் மீன்பிடியாளர்கள் பெரும் நன்மையடையக் கூடிய நிலைமை காணப்படும்.

கடந்த மூன்று நாட்களுக்கு முன்னர் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏழு குளங்கள் திடீரென வான் பாய்ந்ததன் காரணமாக குளங்களில் இருந்து பெருமளவு மீன்கள் கடலினை சென்றடைந்து இருப்பதாக நன்னீர் மீன்பிடிச் சங்கங்கள் தெரிவித்துள்ளன. (4-6-350)

# 38 லீற்றர் கசிப்புடன் இருவர் கைது



(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய நெத்தலியாறு, புளியம்பொக்கணை பகுதிகளில் 38 லீற்றர் கசிப்புடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் அவர்களிடமிருந்து 118 லீற்றர் கோடாவும் மோ.சைக்கிள் ஒன்றும் மீட்கப்பட்டன. கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (4-6-316)

# செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கட்டுடை விநாயக முன்பள்ளி சிறார்களின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா நிகழ்வு மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத் தலைவர் இ.பிரதிபன் தலைமையில் இன்று புதன்கிழமை பிற்பகல் 1:30 மணிக்கு இடம்பெற உள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம அதிதியாக வலிகாம வலய உதவி கல்வி பணிப்பாளர் எஸ்.கிருபானந்தன் கலந்து கொள்ளவுள்ளார். (4-6-110)

# கிளிநொச்சியில் இலவச நீச்சல் பயிற்சி முகாம்

(அக்கராயன்)

கிளிநொச்சியில் இலவச நீச்சல் பயிற்சி முகாம் இன்று 8 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை இடம்பெற உள்ளது என கிளிநொச்சி நீர் விளையாட்டுக் கழகம் அறி வித்துள்ளது.

கிளிநொச்சியில் அமைந்துள்ள நீர்த்தடாகத்தில் அனைவருக்கும் நீச்சல் பயிற்சி வழங்க அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

Kilinochchi Acquatic Sports Association (KASA) அமைப்பின் பராமரிப்பில் கடந்த 6 மாதங்களில் 200 இற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு முழுமையாக பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

தொடர் பயிற்சியினை மேற்கொண்டு தேசிய ரீதியில் சாதனை பெற முடியும் எனவும் வடபகுதி மாணவர்களும் இளைஞர்களும் இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் கிளிநொச்சி நீர் விளையாட்டுக் கழகம் அறிவித்துள்ளது. (4-6-350)





கிளிநொச்சி இரணைமடு நன்னீர் கிராம மீனவ அமைப்பின் 36 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு நேற்று நடைபெற்றது. அதனையொட்டி மீனவர்களுக்கிடை யிலான படகு ஓட்டப் போட்டி,கயிறு இழுத்தல் ,சறுக்கு மரம் ஏறுதல் ,நீச்சல் போட்டி உள்ளிட்ட போட்டிகள் இரணைமடுக் குளத்தில் இடம்பெற்றன.

(படங்கள்= தேவானந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகநூல் தரிசனம் 119

# வியட்நாம் வெற்றிக்கு வழிகாட்டிய தமிழ் மன்னன்



20 வருட கடும் யுத்தத்திற்குப் பின் வியட்நாம் அமெரிக்காவை வென்றது. போர் முடிந்ததும் பத்திரிகையாளர்களுக்கு பதில் அளிக்கும் போது ஒரு செய்தியாளர் வியட்நாம் ஜனாதிபதியைப் பார்த்து ஒரு சிறிய தெற்காசிய நாடு வல்லரசான அமெரிக்காவை தோற்கடித்தது எப்படிச் சாத்தியம் எனக் கேட்டார்?

அதற்கு அந்த ஜனாதிபதி பதில் அளிக்கையில், அமெரிக்கா போன்ற வல்லரசை தோற்கடிப்பது மிகவும் கடினம். ஆனால் ஒரு சரித்திர புகழ்பெற்ற மாவீரனின் வீரமும் தீரமும் செறிந்த கதையை படித்தேன். அது எனக்குள் எழுப்பிய கிளர்ச்சியால் தான் இந்த வெற்றி சாத்தியமானது. அந்த வீரனின் போர்த் தந்திரங்கள், யுத்திகளை எங்கள் போரில் கடைப்பிடித்ததால் வெற்றி அடைந்தோம் எனத் தெரிவித்தார். பத்திரிகைச் செய்தியாளன் யாரந்த மாவீரன் என வியட்நாம் ஜனாதிபதியை வினவ...

வேறு யாருமில்லை கிழக்காசியாவை வென்ற மாவீரனான ராஜராஜ சோழன் தான் இப்படி ஒரு மாவீரன் வியட்நாமில் அவதரித்திருந்தால் இந்நேரம் உலகம் எங்கள் கைகளில் இருந்திருக்கும் என்றார்.

சில வருடங்கள் கழித்து அந்த ஜனாதிபதி இறந்து போனார். அவரது கல்லறையில் "ராஜராஜனின் பணிவான பணியாள் இங்கே ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார்" என அவரின் விருப்பப்படி வசனம் பொருந்திய வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது.

சில வருடங்கள் கழித்து வியட்நாம் வெளியுறவுத் துறை அமைச்சர் இந்தியா வர நேரிட்டது. இந்தியாவில் உள்ள இடங்களான காந்தி சமாதி, சக்தி ஸ்தல், செங்கோட்டை என பலவற்றையும் சுற்றிக் காட்டி கடைசியில் அமைச்சர், ராஜராஜன் பிறந்த ஊர், அரண்மனை, சிலை எங்கே உள்ளது என அதிகாரிகளை கேட்க?

அவர்கள் ஆச்சரியத்துடன் அது தமிழ் நாடு தஞ்சாவூர்ல இருக்கு என்றனர். உடனே தஞ்சாவூர் போக வேண்டும் என வியட்நாம் அமைச்சர் கூற, குறித்த படை வீரர்களுடன் தஞ்சாவூருக்குச் சென்றனர்.

அங்கு சென்று தஞ்சை பெரிய கோவிலில் உள்ள ராஜராஜன் சிலைக்கு அஞ்சலி செலுத்திய பிறகு, கையளவு மண்ணை அள்ளி தன் பையில் சேமித்துக் கொண்டார்.

இதைக்கண்ட பத்திரிகையாளர்கள் ஏன் இந்த மண்ணை உங்கள் பையில் எடுத்துக் கொண்டீர்கள் என அமைச்சரைப் பார்த்து கேள்வி எழுப்பினர். அதற்கு அந்த அமைச்சர், இந்த மண் வீரமும் வெற்றியும் நிறைந்த ராஜராஜன் பிறந்து வளர்ந்த மண்.

வியட்நாம் சென்றடைந்ததும் என் தேச மண்ணில் இந்த மண்ணை கலந்து விடுவேன். இதனால் வியட்நாம் மண்ணில் பல்லாயிரம் ராஜராஜ சோழன் பிறக்கட்டும் என உணர்ச்சி வசப்படக் கூறினார்.

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

# அக்கிராசன உரையில்

## தேர்தலை பிற்போடும் யோசனை

## சமர்ப்பிக்கப்படும் என்கிறார் தயாசிறி

**(கொழும்பு) பாராளுமன்றக் கூட்டத் தொடர் இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில், அக்கிராசன உரையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை காலம் தாழ்த்துவதற்கான யோசனை முன்வைக்கப்படவுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.**

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத் தொடர் கடந்த ஜனவரி 27 ஆம் திகதி நள்ளிரவு முதல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் ஒத்திவைக்கப்பட்டது. அதற்கமைய இன்று புதன்கிழமை ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத் தொடர் ஆரம்பமாகவுள்ளது.

இவ்வாறு ஜனாதிபதியால் பாராளுமன்றம் ஒத்தி வைக்கப்பட்டமை தொடர்பில் பல தரப்பினராலும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையிலேயே தயாசிறி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று பாராளுமன்றத்தில் ஆற்றவுள்ள அக்கிராசன உரையின் போது, தேர்தலைக் காலம் தாழ்த்துவது தொடர்பான யோசனை முன்வைக்கப்படவுள்ளதாக தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலைக் காலம் தாழ்த்துவதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள இறுதி முயற்சியையும் அனைவரும் இணைந்து தோல்வியடைச் செய்ய வேண்டும். சுதந்திரக்கட்சி இதில் முன்னின்று செயற்படும் என அவர் தெரிவித்தார். (நி)

## ரயிலில் மோதுண்டு இருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

நாட்டின் இரு வேறு பகுதிகளில் நேற்று முன்தினம் ரயிலில் மோதுண்டு இருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொடவில பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பகுதியில் காலி - மாத்தறை பிரதான வீதியின் விஜய் மாவத்தையில் உள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவையில் மாத்தறையில் இருந்து கண்டியில் நோக்கிபயணித்துக் கொண்டிருந்த ரயிலில் கார் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது படுகாயமடைந்த கார் சாரதி மாத்தறை மருத்துவமனையில் அனுமதிகக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் 37 வயதுடைய உடகொஹர, கம்புருகமுவ பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவராவார். அதேவேளை, வெல்லவாய பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பகுதியில் வெல்லவாய பிரதேசத்தில் தெதுறு ஓயா பாலத்திற்கு அருகில் உள்ள ரயில் கடவையில் பெலியத்தவிலிருந்து அநுராதபுரம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த ரயிலில் மோதுண்டு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் 37 வயதுடைய பொதுப்பிட்டிய, தல்விட பகுதியைச் சேர்ந்த ஒருவராவார்.

சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக குருநாகல் மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

வெல்லவாய பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 150 | 140 | 200 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 130 | 150 |
| பச்சைமிளகாய் | 250 | 320 | 300 | 300 |
| தக்காளி | 250 | 280 | 300 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 200 | 180 | 200 |
| கோவா | 80 | 70 | 100 | 100 |
| கரட் | 200 | 200 | 220 | 250 |
| பூசணி | 80 | 100 | 80 | 80 |
| புடோல் | 160 | 180 | 150 | 120 |
| வாழைக்காய் | 200 | 200 | 150 | 200 |
| சின்ன வெங்காயம் | 350 | 450 | 500 | 400 |
| பெரிய வெங்காயம் | 160 | 170 | 170 | 160 |
| பாகற்காய் | 250 | 250 | 280 | 400 |
| வெண்டக்காய் | 280 | 350 | 300 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 90 | 100 | 150 |
| பயற்றங்காய் | 400 | 450 | 400 | 500 |
| லீக்ஸ் | 300 | 300 | 300 | 350 |
| பீற்றூட் | 120 | 150 | 160 | 200 |
| கறிமிளகாய் | 650 | 600 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 1800 | 1600 | 1000 | 1600 |
| போஞ்சி | 300 | 250 | 280 | 400 |
| கத்தரிதம்புள்ள | 140 | 120 | 100 | 180 |
| கீரை - 1 பிடி | 100 | 120 | 60 | 100 |
| தேசிக்காய் | 50 | 80 | 100 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 70 | 70-110 |
| இராசவள்ளி | 250 | 250 | 300 | 350 |
| வெங்காயப்பூ | 100 | 140 | 160 | 160 |
| முள்ளங்கி | 50 | 70 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 50 | 30 | 40 | 50 |
| ஈரப்பலா | 100 | 120 | 120 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர்

97





## 22 ஆம் அத்தியாயம்
## வேளக்காரப் படை

முதலில், பல்லக்கின் வெளிப் புறத்திரை 'பனை மரச் சின்னம் உடைய துணித் திரை' விலகியது. பின்னர் உள்ளிருந்த பட்டுத் திரையும் நகரத் தொடங்கியது. முன்னொரு தடவை வல்லவரையன் பார்த்தது போன்ற பொன் வண்ணக் கையும் தெரிந்தது. வந்தியத்தேவன் இனி, தான் குதிரை மேலிருப்பது தகாது என்று எண்ணி ஒரு நொடியில் கீழே குதித்தான்.

சிவிகையின் அருகில் ஓடி வந்து, "இளவரசே! இளவரசே! பல்லக்குச் சுமக்கும் ஆட்கள்" என்று சொல்லிக் கொண்டே அண்ணாந்து பார்த்தான்.

மீண்டும் உற்றுப் பார்த்தான் கண்ணிமைகளை மூடித் திறந்து மேலும் பார்த்தான். பார்த்த கண்கள் கூசின! பேசிய நாக்கு குழறியது. தொண்டையில் திடீரென்று ஈரம் வற்றியது.

"இல்லை, இல்லை! தாங்கள்.. பழுவூர் இளவரசி!.. பழுவூர் இளவரசி உங்கள் ஆட்களின் குதிரை என் பல்லக்கை இடித்தது!" என்று உளறிக் கொட்டினான்.

இதெல்லாம் கண்மூடித் திறக்கும் நேரத்துக்குள் நடந்தது. பல்லக்கின் முன்னும் பின்னும் சென்ற வேல் வீரர்கள் ஓடி வந்து, வல்லவரையனைச் சூழ்ந்து கொண்டார்கள். அப்படி அவர்கள் சூழ்ந்து கொண்டார்கள் என்பது வல்லவரையனுக்கும் தெரிந்தது.

அவனுடைய கையும் இயல்பாக உறைவாளிடம் சென்றது. ஆனால் கண்களை மட்டும் பல்லக்கின் பட்டுத் திரையின் மத்தியில் ஒளிர்ந்த மோகனாங்கியின் சந்திர பிம்ப வதனத்தினின்றும் அவனால் அகற்ற முடியவில்லை.

ஆம் வல்லவரையன் எதிர்பார்த்ததற்கு மாறாக, இப்போது அப்பல்லக்கில் அவன் கண்டது ஒரு நிஜமான பெண்ணின் வடிவந்தான். பெண் என்றாலும் எப்படிப்பட்ட பெண். பார்த்தவர்களைப் பைத்தியமாக அடிக்கக்கூடிய இத்தகைய பெண்ணழகு இவ்வுலகில் இருக்கக் கூடும் என்று வந்தியத்தேவன் எண்ணியதே இல்லை. நல்ல வேளையாக அதே நிமிடத்தில் வந்தியத்தேவனுடைய மூளை நரம்பு ஒன்று அசைந்தது.

அதிசயமான ஓர் எண்ணம் அவன் உள்ளத்தில் உதயமாயிற்று. அதை உபயோகித்துக் கொள்ளத் தீர்மானித்தான்.

ஒரு பெருமுயற்சி செய்து, தொண்டையைக் கனைத்து, நாவிற்குப் பேசும் சக்தியை வரவழைத்துக் கொண்டு, "மன்னிக்க வேண்டும்! தாங்கள் பழுவூர் இளையராணி தானே! தங்களைப் பார்ப்பதற்காகத்தான் இத்தனை தூரம் வந்தேன்!" என்றான்.

பழுவூர் இளையராணியின் பால் வடியும் முகத்தில் இளநகை அரும்பியது. அதுகாறும் குவிந்திருந்த தாமரை மொட்டு சிறிது விரிந்து, உள்ளே பதிந்திருந்த வெண்முத்து வரிசையை இலேசாகப் புலப்படுத்தியது.

அந்தப் புன்முறுவலின் காந்தி நமது இளம் வீரனைத் திக்கு முக்காடித் திணறச் செய்தது. அவனருகில் வந்து நின்ற வீரர்கள் தங்கள் எஜமானியின் கட்டளைக்கு எதிர்பார்த்துக் காத்திருந்ததாகத் தோன்றியது.

அந்தப் பெண்ணரசி கையினால் ஒரு சமிக்ஞை செய்யவே, அவர்கள் உடனே அகன்று போய்ச் சற்றுத் தூரத்தில் விலகி நின்றார்கள். இரண்டு வீரர்கள் பல்லக்கின் மீது மோதிக் கொண்டு நின்ற குதிரையைப் பிடித்துக் கொண்டார்கள்.

பல்லக்கிலிருந்த பெண்ணரசி வந்தியத்தேவனை நோக்கினாள். வந்தியத்தேவனுடைய நெஞ்சில் இரண்டு கூரிய வேல் முனைகள் பாய்ந்தன!

"ஆமாம் நான் பழுவூர் இளைய ராணிதான்!" என்றாள் அப் பெண்மணி.

இவளுடைய குரலில் அத்தகைய போதை தரும் பொருள் என்ன கலந்திருக்க முடியும்? ஏன் இக்குரலைக் கேட்டு நமது தலை இவ்விதம் கிறுகிறுக்க வேண்டும்?

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்



# பரமார்த்த குரு கதைகள்

## குதிரைக்கு லாயம்

(நேற்றைய தொடர்ச்சி)

குருமகானும் ஒருவாறு சமாதானம் அடைந்தார். ஆனால் ஒன்றை மட்டும் உறுதியாகச் சொன்னார்.

"இனி இந்தக் குதிரையை இரவில் கட்டிப் போடாமல் மேய விட்டு விடக் கூடாது. இல்லையேல் அன்றைக்கு நேர்ந்ததைப் போலத்தான் மோசம் வந்து சேரும்" என்றார் குரு.

"கட்டியே வைப்போம்!" என்றார்கள், சிஷ்யர்கள்.

"எங்கே கட்டி வைப்பது? இடம் எங்கே இருக்கிறது?"

"மடத்துக்குப் பின்னால் ஒரு லாயம் கட்டுவோம்" என்றான் மிலேச்சன்.

"எப்படிக் கட்டுவது?" பேதை கேட்டான்.

"இப்படிக் கேட்டால் எப்படி? நான் வெளியே போய் ஆலமரத்துக் கொம்புகளை வெட்டி வருகிறேன். அந்தக் கொம்புகளை வைத்து அழகான ஒரு லாயம் கட்டி விடுவது!" என்று உறுதியான தொனியில் உரக்கவே உரைத்தான் பேதை.

"அப்படியே ஆகட்டும்" என்றார் ஒருவாறு மனம் தேறிய பரமார்த்த குரு.

பேதை கோடரியை எடுத்துக் கொண்டு, ஒரு பெரிய ஆலமரத்தைக் குறி வைத்துக் கொண்டு புறப்பட்டுப் போனான்.

வழியோரத்தில் இருந்த அந்தப் பெரிய ஆலமரத்தை அவன் ஏற்கனவே பலமுறை பார்த்திருக்கிறான். அங்கே போய் நின்று அதை ஏற இறங்க ஒரு முறை நோட்டம் விட்டான்.

சரசரவென அம்மரத்தின் மேல் ஏறி, ஒரு பெரிய கிளையைக் கோடாரியால் வெட்டத் தொடங்கினான். அந்தக் கிளை உயர்ந்து வளர்ந்து ஒழுங்காயிருந்தது.

பேதை அந்தக் கிளையின் நுனிப் பக்கமாக அமர்ந்து கொண்டு அடிப்பக்கத்தை வெட்டிக் கொண்டிருந்தான். அப்போது அந்த வழியாக ஒரு வேதியர் வந்து கொண்டிருந்தார்.

அவர் மரம் வெட்டும் சப்தம் கேட்டு அண்ணாந்து பார்த்தார். அங்கே பேதை விசித்திரமான முறையில் கிளையை வெட்டிக் கொண்டிருப்பதைக் கவனித்தார். அப்போது அவன் ஏறக்குறைய பாதி பாகம் வெட்டி விட்டிருந்தான். இன்னும் இரண்டொரு வெட்டில் கிளை துண்டாகிவிடும். அவனும் கிளையோடு கீழே விழுந்து விடுவான்.

பதறிப் போனார் பார்த்தவர். இப்படியும் ஓர் ஆளா? என ஆச்சரியப்பட்டார்.

"அடடே! யாரையா அது! இப்படி உட்கார்ந்து வெட்டினால் விழப்போகிற கிளையோடு நீயும் விழுந்து விடுவாயே?" என்று எச்சரித்துக் கூவினார் அவர்.

"என்ன ஓய்... வழிப் போக்கரே! இப்படியெல்லாம் அபசகுனமாக அமங்கலமாகப் பேசிக் கொண்டு இங்கே நிற்காதீர் உம் வழியைப் பார்த்துப் போம்!" என்று பேதையும் மரத்தின் மேலிருந்து கத்தினான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி பற்றி பேசுவோர் அதிகம்;
அதைச் செய்வோர் மிகக் குறைவு.
– டெனிகஸான்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இதயத்தை கருக்கவல்ல துருக்கியின் பெரும் துயரம்

துருக்கி மற்றும் சிரியா ஆகிய நாடுகளில் நேற்று முன்தினம் (6) ஏற்பட்ட நிலநடுக்கத்தால், ஆயிரக்கணக்கான மனித உயிர்கள் காவு கொள்ளப்பட்டதென்ற செய்தியை அறிந்த போது இதயம் கருகிப் போனது.

அதிலும் துருக்கியில் நடந்த நிலநடுக்கத்தில் இதுவரை ஐயாயிரம் பேர் உயிரிழந்துள்ளதாக அறியப்படுகிறது.

இந்தத் தொகை இன்னும் அதிகமாக இருக்கலாம் என்ற கணிப்புகள் இதயத்தைப் பதறவைக்கின்றன.

ஆம், காலத்துக்குக் காலம் ஏற்படுகின்ற இயற்கை அனர்த்தத்தால் அப்பாவி மனித உயிர்கள் காவுகொள்ளப்படுகின்ற துயரம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

2004ஆம் ஆண்டு இடம்பெற்ற ஆழிப் பேரலையால் அள்ளுண்டுபோன மனித உயிர்கள் கொஞ்சமல்ல.

உலகம் முழுவதும் அவலக்குரல் ஒலிக்கின்ற அளவில், ஆழிப்பேரலை மனிதப் பேரவலத்தை ஏற்படுத்தி நெடுந்துயர் தந்து போனது.

இதுபோல மண்சரிவு, நிலநடுக்கம், வெள்ளப்பெருக்கு என அவ்வப்போது நடக்கின்ற இயற்கை அனர்த்தங்கள் ஊழிக்காலம் போல தாண்டவமாடுகின்றது.

ஆம், இயற்கை அனர்த்தம் ஏற்படுத்திய நெடுந்துயரில் இருந்து மக்கள் இன்னமும் விடுபட முடியாத துயரத்தில் மூழ்கி இருக்கையில்,

2023ஆம் ஆண்டின் தொடக்கத்திலேயே இயற்கையின் பழிதீர்க்கும் படலம் துருக்கியைத் துவம்சம் செய்துள்ளது.

அந்தோ! கொடுமை. ஒரு கணப்பொழுதில் துருக்கியில் ஏற்பட்ட நிலநடுக்கம் பிஞ்சு குஞ்சுகள், பெண்கள், முதியவர்கள் என எவர் மீதும் இரக்கம் காட்டாமல் தன் ஈனத்தனத்தை கொட்டித் தீர்த்துள்ளது.

உண்மையில் இப்பெருந்துயரச் செய்தியை அறியும்போது மனித வாழ்வு வெறுத்துப் போகிறது.

ஏன்தான் இப்படியொரு அவலம் என்று மனம் விக்கித் தவிக்கிறது.

ஓ! துருக்கியில் ஏற்பட்ட மனிதப் பேரவலம் உலகம் முழுவதையும் பதைக்க வைத்துள்ளது.

ஒரு கணப்பொழுதில் நடந்த இப்பேரவலத்தால் அந்தரித்து நிற்கும் அந்த நாட்டு மக்களுக்கு ஒட்டுமொத்த உலகமும் உதவி செய்ய வேண்டும்.

அவர்களை ஆற்றுப்படுத்த உலக மக்கள் ஒன்றாகப் பிரார்த்தனை செய்ய வேண்டும்.

அவர்களின் இழப்பில் – துயரில் பங்கேற்கும் ஈழத் தமிழ் மக்கள் தங்களின் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

அதேநேரம் வலியின் துயரத்தை அனுபவித்து நிற்கும் ஈழத் தமிழ் மக்களின் ஒரே பிரார்த்தனை இறைவா! மனித சமூகத்தை அவலத்தினின்றும் காப்பாற்று என்பதுதான்.

## தேர்தலை நடத்த நிதி இல்லாவிட்டால் உள்ளூராட்சி மன்றங்களிலிருந்து பெறுங்கள்

### வலி.கிழக்கு பிரதேச சபை தவிசாளர் நிரோஸ்

(கொழும்பு)

தேர்தலை நடத்துவதற்கு நிதி இல்லை என்றால் உள்ளூராட்சி மன்றங்களில் இருந்து பெற்றுக்கொள்ளுங்கள் என வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராஜா நிரோஸ் தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் யாழ். ஊடக அமையத்தில் நடத்திய ஊடக சந்திப்பின் போதே தியாகராஜா நிரோஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போதைய நிலையில் இலங்கையில் உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்துவதற்கு இலங்கையினுடைய திறை சேரியாக இருக்கலாம் அல்லது நாட்டினுடைய வருமானங்களின் அடிப்படையாக இருக்கலாம் அதற்கான செலவினங்களை ஈடு செய்வதற்கான பணம் போதாது இருப்பதாக தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

தேர்தல் ஆணைக்குழு எடுத்து வரும் முயற்சியை நாங்கள் வரவேற்கின்றோம். இந்த தேர்தல் ஒத்திவைக்காமல் நடத்தப்பட வேண்டும் கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக உள்ளூராட்சி மன்றங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்ற நிலையில் ஒரு மக்கள் ஆணையை மீளவும் பெற வேண்டிய ஒரு சூழல் இருக்கின்றது.

இவ்வாறான நிலையில் இதற்கான பணம் போதாது என்கின்ற காரணம் காட்டப்பட்டு ஒத்துழைக்கப்படுமானால் நாங்கள் தேர்தல் ஆணையாளருக்கு ஒரு பகிரங்கமாக விடயத்தை முன்வைக்கின்றோம்.

இது உள்ளூராட்சி மன்ற தேர்தல் என்ற காரணத்தின் அடிப்படையில் உள்ளூராட்சி மன்றங்களிடமிருந்து ஒரு குறிப்பிட்ட பணத்தைப் பெறலாம். ஏனெனில் உள்ளூராட்சிமன்றங்கள் தனியாக வருமானம் ஈட்டும் ஒரு அரச கட்டமைப்பாக இருக்கின்றன. அவ்வாறான சூழ்நிலையில் ஒரு குறிப்பிட்ட அளவு தேர்தலுக்கான செலவீனங்களை அந்தந்த உள்ளூராட்சி மன்றங்களிலிருந்து பெறுவதற்கு உரிய சுற்றுநிருபம் ஊடாக முன்னெடுத்தாவது இந்த தேர்தலை நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

ஏனெனின் தேர்தல்கள் என்பது கருத்து பெறுவதற்கும் கருத்து தெரிவிப்பதற்குமான சுதந்திரம் என்ற அடிப்படையில் ஜனநாயகத்துக்காக எங்களுடைய செல்வீனங்களில் ஒரு குறிப்பிட்ட தொகையை வழங்குவதற்கு தயாராக இருக்கின்றோம் என்றார். (4-7)

## சித்தமருத்துவ அதிகாரிகள் சங்கம் இன்று சுகயீன விடுப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் இன்று ஒரு நாள் சுகயீன விடுப்பு போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர்.

அரச சேவையின் அனைத்து பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கும் சமாந்தரமான பதவி உயர்வினை வழங்கும் பொறிமுறையை உறுதி செய்ய வேண்டும்.

பதவி நிலை உத்தியோகத்தர்களின் சம்பளத்தினை பிற்போடும் அமைச்சரவை தீர்மானத்தை திரும்பப்பெற வேண்டும்.

அனைத்து அரச உத்தியோகத்தர்களுக்கும் குறிப்பிட்ட தினத்திலேயே சம்பளத்தினை வழங்க வேண்டும்.

சேவையின் மீதான வரி விதிப்பில் நியாயமான கொள்கை ஒன்றை நடைமுறைப்படுத்தவேண்டும். ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து குறித்த போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்கமைய சித்த மருத்துவ மனைகளில் உள்நோயாளர் பிரிவு தவிர்ந்த ஏனைய பிரிவுகளின் சேவைகள் நடைபெற மாட்டாது என அரச சித்தமருத்து அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் அறிவித்துள்ளார். (4-6)

## இலங்கை வங்கி ஊழியர்கள் இன்று பணிப்பகிஸ்கரிப்பு

ஊழியர்களின் சம்பளத்துண்டின் மீது விதிக்கப்பட்டுள்ள அரசாங்கத்தின் நியாயமற்ற வரிக்கொள்கைக்கு எதிர்ப்பினை வெளியிடும் முகமாக இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தினரால் இன்று 08.02.2023 ஆம் திகதி பிற்பகல் 12.00 மணியுடன் அரை நாள் வேலை நிறுத்தம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது என இலங்கை வங்கி ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது. (4-6)

## மைத்திரியை தூக்கிலிட வேண்டும்; மொட்டுக்கட்சி ஆவேசம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் குற்றவாளிகளைத் தூக்கில் தொங்கவிட்டுக் கொலை செய்ய வேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தரும் இராஜாங்க அமைச்சருமான சனத் நிஷாந்த தெரிவித்துள்ளார்.

ஊடக சந்திப்பில் வைத்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தினை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டு தாக்குதல் தொடர்பில் நீதிமன்றம் வழங்கிய தண்டனை போதாது. இதை விட பெரிதாக தண்டனை வழங்கி இருக்க வேண்டும்.

அப்பாவி மக்கள் கொல்லப் படும் வரை பார்த்துக் கொண்டிருந்த மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட குற்றவாளிகளைத் தூக்கில் தொங்கவிட்டுக் கொலை செய்ய வேண்டும் என தெரிவித்துள்ளார். (நி)

## தேர்தல் நடைபெறுமா? இல்லையா? உயர்நீதிமன்றமே தீர்மானிக்க வேண்டும்

### முன்னாள் ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

தேர்தலை நடத்துவதா இல்லையா என்பதை உயர் நீதிமன்றமே தீர்மானிக்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொலநறுவையில் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர், "தேர்தல் ஒத்திவைக்கப்படுமா இல்லையா என்பதை என்னால் கூறமுடியாது. அது குறித்து தேர்தல் ஆணைக் குழுவும் அரசாங்கமும் தான் முடிவு செய்ய வேண்டும். இது குறித்து தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் நாளையும் நாளை மறுதினமும் உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

இதன்போதே திட்டமிட்ட திகதியில் தேர்தல் நடைபெறுமா இல்லையா என்பது தெரியவரும் எனத் தெரிவித்துள்ளார். (நி)

## பாடசாலையை விட்டு இடைவிலகும் ஆயிரக்கணக்கான மாணவர்கள்

### அநுர அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

ஒவ்வொரு ஆண்டும் சுமார் 30,000 மாணவர்கள் 10 ஆம் வகுப்பிற்கு முன்பே பாடசாலையை விட்டு வெளியேறுகிறார்கள் என்ற அதிர்ச்சித் தகவலை பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க வெளியிட்டுள்ளார்.

அண்மையில் மாத்தறை மாவட்ட ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு இடையிலான சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் மிகப்பெரிய வளம் மனித வளம் என்பதால், அதன் உச்சக்கட்ட பலனைப் பெறும் வகையில் கல்வித் துறையின் வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

பாடசாலைகளுக்கிடையில் பாரிய முரண்பாடுகள் உருவாக்கப்பட்டுள்ளதால் பாடசாலை முறைமை மறுசீரமைக்கப்பட வேண்டும்.

மேலும், ஒவ்வொரு ஆண்டும் சுமார் 30,000 மாணவர்கள் 10 ஆம் வகுப்பிற்கு முன்பே பள்ளியை விட்டு வெளியேறுகிறார்கள் என்றும் அதனால் இடை நிலைக்கல்வியை கைவிடாத கொள்கை நாட்டுக்குத் தேவை என்றும் அவர் விளக்கினார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பவாரிதியை போற்றித் துதிசெய்த சேலத்துக் கம்பன் விழா-ஒரு பார்வை



கம்பநேசன் அ.வாசுதேவா

உள்ளம் நிறைந்து கிடக்கிறது. மகிழ்ச்சி என்ற உணர்வு மனதைக் கடந்து, உயிரிலும் போய் உட்கார்ந்து கொண்டதாய் ஓர் திருப்தி. கடந்த மூன்றாண்டுகளாக நாட்டிலும் உலகிலுமாய் உண்டான நெருக்கடிகளால், தமிழகம் செல்லாதிருந்த என் குருநாதர் கம்பவாரிதி 'இலங்கை ஜெயராஜ் ஐயாவோடு, சென்றவாரம் சேலம் கம்பன் கழகத்தின் பொன் விழாவுக்காகத் தமிழ்நாடு சென்றிருந்தேன். அந்த அனுபவத்தைத்தான் இங்கு சொல்லி மகிழப் போகிறேன்.

சென்னையில் ஐயாவின் அன்பிற்கினிய மாணவர்கள் பலர் வரிசையாய்க் காத்திருந்து, தெய்வ தரிசனம் கிடைத்தாற்போன்ற திருப்தியோடு, எம்மைத் தம் மனச் சிம்மாசனத்தில் அமர வைத்து அழைத்துச் சென்றனர். பாதணிகளை தூரக் களைந்து பணிவன்போடு சாஷ்டாங்கமாய் மூன்று முறை விழுந்து எழுந்து அவர்கள் ஐயாவை வணங்கிய விதம், உணர்வுபூர்வமானதாய், உள்ளன்பு மிக்கதாய், உண்மை நிறைந்ததாய் அமைந்திருந்தது.



மரியாதை கலந்த அன்போடு வழி நெடுங்கிலும் கணத்திற்கு கணம் உபசரித்து ஐயாவை சேலத்திற்கு அழைத்துச் சென்றனர். அங்கு சேலம் கம்பன் கழகச் செயலர் புலவர் இராமன் இணைச் செயலர் சுஜீந்திர குமார் எனப் பலர் காத்திருந்து ஐயாவின் கால் தொட்டு மரியாதையோடு வரவேற்றனர். கண்ணப்பனுக்கு நிகரான அன்போடு ஐயாவின் பெயரை தன் மார்பில் பச்சை குத்தியுள்ள சேலத்து மாணவர் ஒருவர் ஐயா வருவதற்கு முதல் நாளே ஐயாவோடு தங்க விரும்பி அவர் தங்கவிருந்த விடுதியில் அறையெடுத்துக் காத்திருந்தார். நெசவுத் தொழிலாளரான அவர் ஐயாவின் திருவுருவை பட்டுத்துணியிலே நெய்து சால்வையாகப் பலருக்கும் வழங்கி ஆச்சரியப்படுத்தினார்.

**மூன்று நாட்கள் விழா**

நிகழ்ச்சிகள் யாவும் மிகச் சிறப்பு. முதல் நாள் நிகழ்வில் உரையாற்ற இருந்த முன்னாள் மத்திய அமைச்சர் ஜயத்ரட்சகனும் தற்போதைய அமைச்சரும் தி.மு.காவின் மூத்த உறுப்பினருமான துரைமுருகன் அவர்களும் வருகை தராமல் போக அவர்களின் இடத்தை நிரப்பிப் பேசும்படி விழா நிர்வாகிகள் ஐயாவை கேட்டுக் கொள்ள, ஐயாவும் அதற்கு உடன்பட்டார். ஆனால் விழாவில் தொடக்கவுரை, வாழ்த்துரை என்ற சம்பிரதாய நிகழ்வுகள் நீண்டு கொண்டு சென்றன. சிறுமியரின் நடனம் பின் மாணவரின் பேச்சு என்று நிகழ்ச்சி நிரலில் இல்லாத நிகழ்வுகள் எல்லாம் அரங்கேறி 8.00 மணிக்கு ஐயாவிடம் மேடை கையளிக்கப்பட்டது. சபை முன் சொன்ன நிகழ்வுகளால் மிகவும் சோர்ந்திருந்தது. சபை அறிந்து பேசிப் பழகிய ஐயா பாடு மிகவும் சங்கடமாய் அமைந்து போயிற்று. பேசத் தொடங்கிய ஐயா வணக்க சம்பிரதாயங்களை முடித்துவிட்டு காலப் பொருத்தம் இல்லாததால் நான் அதிகம் பேச விரும்பவில்லை என்றார். தமிழ் உள்ளவரை கம்பன் இருப்பான் கம்பன் உள்ளவரை தமிழ் இருக்கும். எனவே கம்பனை நாளை பேசலாம் நன்றி வணக்கம் என்று கூறிப் பேச்சை முடித்துவிட்டார். யாழ்ப்பாணத்தில் ஐயாவின் இது போன்ற அதிரடி நடவடிக்கைகளைப் பார்த்துப் பழகிய எனக்கு ஆச்சரியம் ஏதும் இல்லை. ஆனால் அங்கிருந்தவர்கள் இந்த முடிவை எதிர்பார்க்கவில்லை. கழகத்தவர்கள் வெலவெலத்துப் போனார்கள். ஐயாவை சூழ்ந்து கொண்ட இரசிகர்களுக்கு மத்தியில் உள் நுழைந்து மன்னிப்புக் கோரினர். எனக்கு ஒரு கோபமும் இல்லை. எனது பேச்சு வெற்றிபெறுவதை விட விழா வெற்றிபெறுவதே எனக்கு முக்கியம் அதனால்தான் பேச்சை முடித்தேன் என்று சங்கடப்பட்டிருந்த அவர்களைத்தேற்றி விடை கொண்டார்.

சபையோர்கள் மூன்று நிமிடப் பேச்சு. ஆனால் ஒரு முத்தாய்ப்பான பேச்சு என்று கூறி அந்த சுருக்கப் பேச்சின் சுவாரஸ்யத்தை இரசித்தனர். மறுநாள் இதை அறிந்த வேறு சில பேச்சாளர்கள் தாங்களும் புதுமை செய்வதாய் நினைத்து நேர ஒழுங்கீனங்களை கண்டிப்பதாய் கழகத்தாரை சபையோர் முன் அநாகரீகமாய் அவமதித்தனர் அதில் கண்ணியம் இருக்கவில்லை.

**மாலை நிகழ்வில் ஐயாவின் பேச்சு இருந்தது**

அந்த உரையின் தொடக்கத்தில் ஐயா நேற்று நான் பேச்சை சுருக்கி முடித்தது சபையோரை களைக்க வைக்கக் கூடாது என்பதற்காகத்தான். விழா ஏற்பாட்டாளர்களுக்குரிய சங்கடங்களை நான் நன்கு உணர்வேன். நான் முதலில் ஒரு விழா அமைப்பாளன் அதன் பிறகு தான் பேச்சாளன். நேற்றைய என் செயலில் நான் யாரையாவது நோகச் செய்திருந்தால் முதலில் அவர்களிடம் மன்னிப்புக் கோருகிறேன் என்று கூறி அவர்களைத்தேற்றி சபை நாகரீகத்திற்கு சிறந்த ஓர் வழிகாட்டுதல் செய்தார். ஐயா இப்படிச் சொல்ல சபையில் என் முன் இருந்த கழகச் செயலர்கள் இருவரும் பெரிய மனிதன் பெரிய மனிதன் தான் என்று கூறி தமக்குள் நெகிழ்ந்ததைக் கண்டு நான் மகிழ்ந்தேன்.

அன்று மானுடம் வென்றதம்மா என்ற தலைப்பில் ஐயா பேசிய பேச்சு பலரையும் கவர்ந்தது. மேடையை விட்டு இறங்கியதும் சபை ஐயாவை சூழ்ந்து கொண்டது. பேச்சை வரிக்கு வரி இரசித்து தம் மகிழ்வையும் திருப்தியையும் வெளிப்படுத்திக் கொண்டாடி இரசிகர்கள்அழுதும் தொழுதும் நெகிழ்ந்து நின்றனர். போட்டி போட்டுக் கொண்டு புகைப்படம் எடுக்கத் துடித்தனர். மேடையில் பேசிய நேரத்தை விடவும் இரசிகர்களைக் கடந்து வருவதற்கு ஐயாவிற்கு அதிக நேரம் எடுத்தது.

ஐயாவை கொண்டாடுவதற்கென்றே இந்த விழா எடுக்கப்பட்டது என்று சொல்லும்படியாய் இலக்கியவாதிகள், பேச்சாளர்கள், இரசிகர்கள் என எல்லோரும் ஐயாவை உச்சிமேல் ஏற்றிப் போற்றித் துதித்தனர். நியாயமாய்ப் பார்த்தால் விழா ஏற்பாட்டாளர்கள் சபையின் மேற் செயலுக்காய் கோபம் கொண்டிருக்க வேண்டும். ஆனால் ஐயா மீதான காதல் எல்லோரிடத்திலும் போல அவர்களிடத்திலும் மிகுந்திருந்த காரணத்தால் அவர்களும் கூடவே நின்று ஐயாவை கொண்டாடி மகிழ்ந்தனர்.

கடவுளை நேரில் கண்டாற் போல் அவர்கள் இருந்தார்கள். 'ஐயா! மூன்றாண்டுகளாய் உங்களைக் காணமல் தவித்துப் போனோம்.", 'ஐயா! நாங்கள் இலங்கை வர எண்ணியிருந்தோம்', 'உங்கள் அனுமதிக்காக காத்திருந்தோம்', ஐயா நீங்கள் நல்லாய் இருக்க வேண்டும், எங்கள் ஆயுளையும் சேர்த்து நீங்கள் வாழுங்கள், நீங்கள் வாழ்ந்தால் தமிழ் வாழும் என்று நெக்குருகிக் கூறியவர்களும் நீங்கள் நம்புகிறீர்களோ தெரியாது? 'ஐயா நீங்கள் சொற்பொழிவில் சொன்னபடி வீட்டில் ஒவ்வொரு நாளும் யாகம் வளர்க்கிறோம்', 'முடிந்தவரை மனிதம் பேணி வாழ நினைக்கிறோம்'. 'உங்களால்தான் ஓரளவேனும் ஒழுக்கத்தோடும் ஜீவகாருண்ணியத்தோடும் வாழ்கிறோம்.', 'மச்ச மாமிசம் சாப்பிடுவதை உங்கள் பேச்சைக் கேட்டு நிறுத்திவிட்டோம்', 'சத்தியமாக வாழவேண்டும் என்று உங்கள் பேச்சைக் கேட்டு முயல்கிறோம்' என்று ஐயாவின் ஒவ்வொரு வார்த்தையையும் தங்கள் வாழ்க்கையாக்கி வாழ்கின்ற உண்மை மனிதர்களைக் கண்டோம். நீங்கள் தமிழ் நாட்டிலேயே தங்கி விடுங்கள், உங்களை நாங்கள் மிகக் கவனமாகப் பார்த்துக் கொள்கிறோம்' என்று மன்றாட்டமாக வேண்டிக் கொண்டவர்களும் மிக நீண்ட தூரத்தில் இருந்து வந்து ஐயாவுக்கு மாலை சாத்தி வணங்கி எங்கள் வாழ்நாள் இலட்சியம் நிறைவேறிவிட்டது.

இனி இறப்பினும் எமக்கு சம்மதமே என்றுரைத்து சூழ இருந்த எம் எல்லோரையும் அழ வைத்த மனிதர்களும் ஐயா மீது கொண்ட அளப்பரும் மதிப்பால் தன் மகனின் பெயரை ஜெயராஜ் என்று மாற்றிய தோடு நாற்பது வருடத்திற்கு மேல் நடத்தி வந்த தன் நகைக்கடைக்குரிய பெயரையும் ஜெயராஜ் நகைக் கடை என்று பெயரிட்டு விட்டு, ஏதோ இந்த ஏழையால் முடிந்ததை செய்தேன் என்று சாதாரணமாக சொன்ன தேவகோட்டையைச் சேர்ந்த மா மனிதரும் தங்கத்தில் திருவள்ளுவரை மிக அழகாக செய்து கொண்டுவந்து ஐயாவுக்குக் கொடுத்து மகிழ்ந்த கோயம் பத்தூர் அன்பருக்கு நான் பேசப் போன கல்லூரியில் தனக்காக கொடுத்த பெருந்தொகைப் பணத்தை ஐயா பெயரில் அறக்கட்டளையாய் நிறுவிவிட்ட நபரும் ஊடகங்கள் பல காத்துக் கிடந்து தன்னை வட்டமிடவும் அவற்றை எல்லாம் புறந்தள்ளிவிட்டு ஐயாவின் காலில் சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கிய பாண்டிச்சேரி மாநில உள்துறை அமைச்சர் கௌரவ நமசிவாயம் அவர்களது செயலும் மூன்றாம் நாள் நிகழ்வில் மேடையில் அமர்ந்திருந்து ஐயாவை கண்டதும் எழுந்து மரியாதை செய்த முன்னாள் தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி அவர்களும் முன்னாள் மத்திய அமைச்சர் வாசன் அவர்களது செயலுமாய் விழா நிகழ்வுகளுக்கிடையில் சந்திக்கக் கிடைத்த சிலரின் அன்பையும் உணர்வையும் கண்டு மலைத்துப் போனேன்.

இரண்டாம் நாள் காலை சிறந்த பேச்சாளரும் திரைப்பட இயக்கு நருமான் பாரதி கிருஷ்ண குமார் அவர்களின் உரை இடம் பெற்றது. என்றும்போல் தன் புதிய பார்வையாலும் உணர்வுப் பேச்சாலும் சபையை தன் கைக்குள் வைத்து அவர் வெற்றி கொண்டார். மதியம் 12.30 மணியளவில் அடுத்த அரங்கு ஆரம்பித்தது. உலகறிந்த பேச்சாளர் நாதவாணி திருமதி.பாரதி பாஸ்கர் அவர்கள் அந்த அரங்கிற்கு தலைமை தாங்கினார். நேரங் கடந்த அந்த நேரத்திலும் தன் நாவன்மை மிக்க பேச்சால் சுவை ததும்ப அந்த அரங்கை அற்புதமாக கொண்டு சென்றார். அன்று மாலை பட்டிமண்டபம் அது ஐயாவின் தலைமையில் இடம்பெற்றது. அந்த நிகழ்வும் உச்சம் தொட்டது. முனைவர் மாது, கோ சரவணன் போன்றோர் அந்த அரங்கில் சிறப்பாக சிக்ஸர் அடித்து சபையின் ஏகோபித்த வரவேற்பைப் பெற்றனர். நிறைவு நாள் காலை கவிமாமணி அப்துல் காதர் தலைமையில் கவியரங்கு இடம்பெற்றது. கையிலே பேப்பர் துண்டு எதுவும் கிடையாது பேசுவது போல கவிதை சொல்லி அசத்தினார். அந்த அசாத்தியத் திறமை கண்டு சபை சிலிர்த்துப் போயிற்று.

ஐயாவின் பேச்சென்றால் சபையின் முன்வரிசை ஆசனங்கள் பேச்சாளர்களாலே நிறைந்து விடுகிறது. எத்தனை மணியானாலும் நிறைந்து வழியும் சபை அப்படியே அசையாமல் இருந்து கேட்கிறது. பேச்சாளர்கள், இளையவர்கள், பெரியவர்கள் என்ற பேதமின்றி அனைவரும் ஐயாவுக்கே முதல் வணக்கம் செய்கிறார்கள். ஐயாவின் கணிப்பைப் பாராட்டை எதிர்பார்த்து நிற்கிறார்கள். உண்மையைச் சொன்னால் இலக்கியவாதிகள், தனவான்கள், சமயவாதிகள், அரசியலாளர்கள், சாமானியர்கள் என அனைவரும் ஐயாவின் அன்பிற்கு ஏங்கி நிற்கிறார்கள்.

அருள் நிறைந்த மனத்தோடும் அன்போடும் ஐயா, அவர்கள் மீது பதில் அன்பு செய்கிறார். 'கொடுத்தலும் இன்சொலும் ஆகப் பெறின் அடுக்கிய சுற்றத்தால் சூழப்படும்' என்ற வள்ளுவ வாக்கை ஐயாவின் வாழ்வு மெய்ப்பித்து நிற்கிறது. "யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன் சாந்துணையும் கல்லாதவாறு" என்ற குறள் என்னை நோக்கி எள்ளி நகையாடுவதாய் உணர்கிறேன். ஆம் சிறந்த ஒரு கல்விமானை எல்லா ஊரும் ஏன் எல்லா நாடும் தன் ஊரவனாய் தன் நாட்டவனாய் எண்ணிப் போற்றிக் கொண்டாடும் என்பது தான் மேற் சொன்ன குறளுக்குரிய பொருள். அந்த குறளுக்குரிய அனுபவ விளக்கமாய் அமைபவர் நம் ஐயா.

கடவுளே முருகா என்னை என்னென்னவோ சொல்லிப் புகழ்கிறார்கள். இந்தப் புகழ்வார்த்தைகளில் ஒட்டாமல் நான் வாழ்கிறேன். அப்படியே இறுதிவரை என்னை வாழ வை என்று தன் மன உணர்வை கூறும் ஐயா. செங்கம்பளம் விரித்துப் போற்றும் தமிழ்நாட்டில் கூட, மூன்று நாட்களின் மேல் இனிப் போதும். எப்படா வீடு போய்ச் சேர்வேன் என இருக்கிறது என்று வீடு செல்லத் துடிப்பதைப் பார்த்து வியக்காமல் என்னால் இருக்க முடியவில்லை. கூடவே இருந்து ஐயாவைப் புகழ்ந்து எதையோ சாதிக்க நினைக்கிறாய் போலும். இப்படி நீங்கள் என்னென்னமோ எண்ணக் கூடும். என்னையும் ஐயாவையும் சரிவரத் தெரியாதவர்கள் இப்படி நினைக்கக்கூடும். அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. இது முகஸ்துதியா, புகழ்ச்சி வார்த்தையா என்பதை ஒரு முறை தமிழ்நாடு சென்று ஐயாவின் நிகழ்வை நேரில் பார்த்துவிட்டுச் சொல்லுங்கள். நான் இங்கு சொல்லியிருப்பது அங்கு ஐயாவுக்குள்ள மரியாதையில் நூறில் ஒரு பங்கைத்தான் என்ற உண்மையை நீங்கள் நேரில் கண்டால் உணர்வீர்கள்.

வரும் வழியில் எனது தொலைபேசிக்கு ஓர் அழைப்பு. எடுத்துப் பேசினேன். பாரதி பாஸ்கர் அம்மைதான் பேசினார். ஐயாவிடம் கொடுத்தேன். ஐயா நான் இன்று காலை ஒரு கல்லூரிக்குப் பேசச் சென்றிருந்தேன். அங்கு பெருந்தொகைப் பணம் கொடுத்தார்கள். அதனை ஏதாவது நல்ல காரியத்தை செய்யுங்கள் என்று சொல்லி அவர்களிடமே திருப்பிக் கொடுத்தேன். அவர்கள் என் பெயரில் ஒரு அறக்கட்டளை நிறுவுவதாய்ச் சொன்னார்கள். நான் அப்படி செய்வதென்றால் இலங்கை ஜெயராஜ் ஐயா பெயரில் அறக்கட்டளையை நிறுவுங்கள் என்று சொல்லியிருக்கிறேன். அதை உங்களிடம் சொல்லி உங்கள் சம்மதம் பெற வேண்டும். அதற்காகத்தான் அழைத்தேன் என்றார். நமக்குத்தான் ஐயாவின் பெருமை புரியவில்லை. முற்றத்து மல்லிகை மணம் வீசாது என்பார்களே: இது தானோ அது. அல்லது மாணிக்க வாசகர் சொன்னாற்போல் 'கையிலங்கு பொற் கிண்ணம் என்றலால் அரியை என்றுனைக் கருதுகின்றிலேன்' என்ற நிலைதான் போலும்.

என்றும் போல், இறைவா! முடிந்தவரை என்னை ஐயாவைப் போல் வாழ வை! அதற்கான தகுதியை எனக்கு வரமாகத் தா! என்று மனதுக்குள் மன்றாடிப் பிரார்த்திக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறவுகள் பயணி...

யாழில் இருந்து கடந்த 04ஆம் திகதி சுதந்திர தினத்தன்று, சுதந்திர தினத்திற்கு எதிரான பேரணி கிழக்கு நோக்கி புறப்பட்டது.

இவ்வாறு புறப்பட்ட பேரணியில் போராட்டக்காரர்கள் பயணித்த பேருந்து மீது கல்வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்ட இராணுவ முகாம் அருகில் இடம்பெற்ற குறித்த கல்வீச்சில் பேருந்தின் முற்பகுதிக் கண்ணாடி சேதமடைந்துள்ளது.

வலிந்து காணாமலாக்கப்பட்டோரது உறவுகள் பயணித்த பேருந்தே இவ்வாறு கல்வீச்சு தாக்குதலுக்குள்ளாகியுள்ளது. (4-7,104)

## இளைஞனை...

உடையார்கட்டு வெள்ளப்பள்ளத்தினை சேர்ந்த 21 வயதுடைய விஜயராசா யசீகரன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நண்பர்களுடன் சேர்ந்து மது அருந்திக் கொண்டிருந்தவேளை நண்பர்களுக்கிடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தினை தொடர்ந்து ஏனைய மூன்று நண்பர்களால் குறித்த இளைஞன் கிணற்றுக்குள் தள்ளி வீழ்த்தப்பட்டுள்ளார்.

இவரது உயிரிழப்பில் சந்தேகம் ஏற்படுவதாக பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர்.

உயிரிழந்த இளைஞனின் சடலத்தில் கீறல் காயங்களும் காணப்பட்டுள்ளன. வாக்குமூலங்களின் அடிப்படையில் பொலிஸ் விசாரணையினை தொடர்ந்து, சம்பவத்துடன் தொடர்புடைய மூவரை புதுக்குடியிருப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்களை நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோது 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவிட்டதுடன் உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (4-7,60)

## கிளிநொச்சியில்...

யிலிருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.

சடலம் கிளிநொச்சி வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவத்தில் 35 வயதுடைய கனகரத்தினம் ரீகன் என்ற 2 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-7,100)

## தமிழ் மக்கள்...

அங்கு கருத்துரைத்த கலாநிதி ஆறு. திருமுருகன் மேற்கண்டவாறு சர்வமதத் தலைவர்களிடம் எடுத்துக்கூறினார்.

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி கொஞ்சமல்ல. அவர்கள் அல்லல்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரே நாட்டை இந்த நிலைக்குக் கொண்டு வந்துள்ளது.

ஒரு காலத்தில் தமிழ் மக்கள் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டது.

இதனால் அவர்கள் மிகப்பெரும் கஷ்டங்களை அனுபவித்தனர்.

ஆனால் அது தொடர்பில் மதத் தலைவர்கள் வாய்மூடி மௌனமாக இருந்தனர்.

நல்லை ஆதீனத்திற்கு அரச தலைவர்களும் மதத் தலைவர்களும் வந்துபோகின்றனர்.

நாங்கள் பல்வேறு விடயங்களை அவர்களுக்கு எடுத்துக்கூறினோம்.

ஆனால் அதுபற்றி அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஒருமுறை அஸ்கிரிய பீடாதிபதி அவர்கள் இங்கு வந்தபோது, தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கு உதவுங்கள் எனக் கேட்டோம்.

அவரும் செய்வோம் என்றார். பின்னர் எதுவும் நடக்கவில்லை.

இங்கு வருகின்ற சர்வமதத் தலைவர்கள் நீதியை எடுத்துரைத்து தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்.

இதனைச் செய்யாதவிடத்து சர்வமதத் தலைவர்களின் வருகையால் எந்தப் பயனும் ஏற்படமாட்டாது என்றும் கூறினார்.

கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களின் உரையைச் செவிமடுத்த சர்வமதத் தலைவர்கள் தமிழ் மக்களுக்கு நீதி கிடைப்பதற்கும் சமாதானம் ஏற்படுவதற்கும் தாம் பாடுபடுவோம் எனக் கூறினர். (4)

## 5 ஆயிரத்தைக்...

பட்ட நிலநடுக்கத்தில் உயிரிழந்த வர்களின் எண்ணிக்கை 3,419 ஆக உயர்ந்துள்ளதாக துருக்கி துணை ஜனாதிபதி ஃபுவாட் ஒக்டே தெரிவித்தார்.

மேலும், 20,426 பேர் காயமடைந்துள்ளதாகவும் 5,700க்கும் மேற்பட்ட கட்டடங்கள் அழிந்துள்ளதாகவும் துருக்கியின் பேரிடர் மற்றும் அவசரநிலை மேலாண்மை ஆணையம் தெரிவித்துள்ளது.

சிரியாவில், குறைந்தது 1,602 பேர் உயிரிழந்துள்ளனர் மற்றும் சுமார் 3,500 பேர் காயமடைந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சகம் மற்றும் ஒயிட் ஹெல்மெட் மீட்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

பேரழிவிற்குள்ளான பகுதியில் பனிப்பொழிவு மீட்புப் பணிகளை தாமதப்படுத்தி வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, தொடர்ந்து மீட்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதால், உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்க கூடுமென அஞ்சப்படுகின்றது. (4-7)

## மற்று...

மாணவன்) தாயார் வடிவேலு கனகம்மா நேற்று முன்தினம் 6ஆம் திகதி தனது 87 ஆவது வயதில் கொழும்பில் காலமானார்.

யா/வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலையின் ஓய்வுபெற்ற ஆசிரியரான இவர், கொழும்பில் தனிமையில் வசித்து வந்த நிலையில் காலமானார்.

காணாமல் போன தனது மகனை ஒரு தடவையாவது பார்ப்போம் என்ற நம்பிக்கையில் பல போராட்டங்கள், வேறு பல முயற்சிகளை மேற்கொண்டபோதிலும், தனது இறுதி ஆசை நிறைவேறாத நிலையில் உயிரிழந்துள்ளார். (4-7)

## 13வது திருத்...

தென்பகுதியில் உள்ள பௌத்த பிக்குகள் அடங்கிய சர்வமதக் குழு யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் மேற்கொண்டு வடபகுதியில் உள்ள சர்வமதத் தலைவர்களை சந்தித்து கலந்துரையாடியது.

கலந்துரையாடலுக்கு பின்னர் ஊடக சந்திப்பிலேயே பௌத்த பிக்குகள் உட்பட சர்வமதத் தலைவர்கள், 13ஆம் திருத்தத்திற்கு மேலதிகமாக தமிழர்களுக்கு அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என அறிவித்தனர்.

13ஆம் திருத்தத்தை அமுல்படுத்தக் கூடாது என ஜனாதிபதிக்கு நான்கு பிரதான பௌத்த பீடங்கள் கூட்டாக கடிதம் எழுதியுள்ள நிலையில் யாழ்ப்பாணத்தில் பௌத்த பிக்குகளின் அறிவிப்பு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (4-7,33)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 07/02/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1479
வெற்றி இலக்கங்கள்
கும்பம் 1 4 2 9 2 6
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.02.07
சீட்டிழுப்பு இலக்கம் - 1054
Y 29 36 51 66
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.02.07
சீட்டிழுப்பு இலக்கம் 3266
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
K 03 54 55 71
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 07/02/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1372
D 26 03 13 32 41

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.02.07
சீட்டிழுப்பு இலக்கம் 333
துலாம் 01 46 51 55 துலாம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/02/07
சீட்டிழுப்பு இலக்கம் 5024
S 3 9 6 4 1 2
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1999 | நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.02.07 | தினம் செவ்வாய்க்கிழமை
C 29 40 53 54
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,392,620/-
DLB

சனிதா
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.02.07
சீட்டிழுப்பு இல : 4160
வர்ணம் : பச்சை
ரூ. 5,115,960/-
வெற்றி இலக்கங்கள் 07 37 38 63 G
DLB

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 285
சீட்டிழுப்பு திகதி 2023.02.07
செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 17 35 49
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,765,580/-
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் பரிசு வெல்லப்பட்டுள்ளது ரூ. 2,203,506/-
திகதி 2023-02-07
வெற்றி வாரம் 3711
வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 14 22 25 50
6872 119
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 12,263,126/-
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
S 25 21 37 38 41
சீட்டிழுப்பு வாரம் 1175
வர்ணம் இளம் சுயில்
திகதி 2023.02.07 செவ்வாய்க்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 304,012,160.20
DLB தொலைபேசி : 011-2 333 546-47 Web : www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல : 1825
வர்ணம் : கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2023.02.07
ரூ. 4,264,500/-
வெற்றி இலக்கங்கள் 18 32 53 76 T
DLB

## வருடாந்த பொதுக்கூட்டம்

Manipay parish sports club இன் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும்

காலம் :- 19.02.2023
நேரம் :- பிற்பகல் 4.00 மணி
இடம் :- Manipay Hindu College page Hall

பொதுச்சபை உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். செயலாளர் :- Manipay parish sports club
(C-5927)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (14490)

**076 825 7716** (ஆகாஸ்)



சுய தொழில்வாய்ப்பு - நிறைந்த வருமானம்

V2 TRAVELS CHOLA FOODS உடன் இணைந்து

புதிதாக ஆரம்பிக்கும் உணவுப்பொதிகள் விநியோகத்தில் உங்கள் பிரதேசத்திற்கான உணவுப்பொதிகள் விநியோகதாரராக நீங்களும் இணைந்து கொள்ளுங்கள்

பகுதிநேரமாக மாதம் 50'000/= மேல் சம்பாதிக்கலாம்

(இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)

ஆட்டோ/ மோட்டார் சைக்கிள்/சைக்கிள் வைத்திருத்தல் அவசியம்

யாழ் மாவட்டத்தில் எப்பகுதியில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

(C-5926)

**V2 TRAVELS 0777-068-777**



## சுற்றுலா விசா சம்பந்தமான ஆலோசனைகள்

ஐரோப்பிய நாடுகளுக்கும், லண்டன், கனடாவுக்கு சுற்றுலா விசா தேவைப்படுபவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

**Hybrid International Hub (pvt) LTD** (14531)

**076 250 0098 / 021 222 1265**


# 02ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 11.04.1945

உதிர்வு 08.02.2021

## அமரர் பரமேஸ்வரி தனபாலன்

இரண்டு ஆண்டுகள் கடந்த போதும்
கலையவில்லை உங்கள் நினைவுகள்
நாம் காணும் காட்சிகளிலெல்லாம்
எம் கண்முன்னே நிற்கிறீர்கள்
உங்களை நினைக்காத கணங்களே இல்லை
எம் பாசமிகு தாயாரே.
என்றென்றும் எம்மோடு வாழ்ந்திடுவீர்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நாச்சிமார் கோவில் வீதி, சரவணை. 077 768 6713 மகன், மகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள். (14538)


## தேவை

யாழ் திருநெல்வேலி பலாலி வீதியில் பரமேஸ்வராச் சந்தியில் உள்ள எமது கணக்கியல் நிறுவனத்திற்கு.

01. வரவேற்பாளர்
02. காரியாலய உதவியாளர்
03. பயிலுனர்கள்
04. துப்பரவாக்குதல் தொழிலாளி தேவை.

தொடர்பு :- 074 262 2732
whats app :- +94 77 953 0496

(14545)



## வேலையாள் தேவை

கொக்குவிலில் உள்ள தளபாட நிலையத்திற்கு பெண் வேலையாள் தேவை.

தொடர்பு : **074 210 4820** (14534)



அறுசுவை உணவுகளிற்கு சுத்தமான

## றோயல் நெய்

உங்கள் வாழ்வின் இனிய தருணங்களை தரமான **றோயல் நெய்** கொண்டு தயாரித்த அறுசுவை உணவுகளுடன் கொண்டாடி மகிழுங்கள்.

ஆய்வுகூடத்தில் தரம் பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகின்றது.



Packed By:-
**Royal Industries®**
Marketed By:-
**சிவா நறுமணப் பூங்கா®**
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: **021 2222 567**

குறிப்பு

யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து பாமசிகளிலும் சுப்பர்மார்க்கட்களிலும் பலசரக்கு கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். (C-5922)



NEW SCIENCE WORLD
VICTORY MUST

## NEW SCIENCE WORLD

கணித விஞ்ஞானப் பிரிவுகள்

**2023 Revision Classes**

### Tamil & English Medium

Zoom இன் ஊடான இணையவழி வகுப்புக்களும் நேரடி வகுப்புக்களும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

**Physics**
R.Kumaran
R.Kugen

**Chemistry**
Dias
K.T.Sivakumar

**Bio**
N.T.Gajenthiran

**Com.Maths**
K.Ainharan
G.V.Khariharan

ஆரம்பம் 23.02.2023 (வியாழக்கிழமை)
10.02.2023ஆம் திகதி தொடக்கம்
அனுமதிகள் வழங்கப்படும்.
Zoom இன் ஊடான இணையவழி வகுப்புக்களுக்கு சகல மாவட்ட மாணவர்களும் இவ்வகுப்பில் இணைந்து கொள்ள முடியும்.

மேலதிக விபரங்கள் மற்றும் தொடர்புகளுக்கு
**021 221 6690, 077 336 4030,**
**075 836 4055, 077 336 4055**

அலுவலக நேரம்:- 8.00 am - 5.00 pm

(C-5892)


# கண்ணீர் வலிகள்



எமது ஆருயிர்த் தோழன் வ.திவாகரனின் (திவா)
தாயார்

## அமரர் வடிவேலு கனகம்மா



தவமிருந்தீர்கள்,
தாய்க்காக நீயும்
உனக்காக
உன் அன்னையும்... இன்று
தவம் கலைத்தாளோ?
எம்மை அரவணைத்த
எம்தாய்.
அன்னையின் ஆத்மா அமைதியடைய
ஆத்மார்த்தமாக ஆண்டவனை வேண்டும்

பொ.வாகீசன், கு.ஜெயந்தன்
மற்றும் Brownes நண்பர்கள்

(C-5925)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, ... உள்ள அவர்களது அச்சகத்தில் 08.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org